223473

# கிராமாந்தவன்

VL
Y31 m N27
N29.2.9
223473

Regd. No. M. 1930 ஓம்: வந்தேமாதரம். Annual Sub. Rs. 2

# கிராமானுகூலன்.

(ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை)

# GRAMANUKULAN.


| புத்தகம் 2 | 1929 ஞு ஜனவரி-பிப்ரவரிமீ<br>விபவ ஞு தைமீ | ஸஞ்சிகை 9 |
|---|---|---|


சந்தா விபரம்.

| | | | |
|---|---|---|---|
| உள்நாடுகளுக்கு வருட சந்தா தபாற்கூலி உள்பட | | | ரூபா 2—0—0 |
| வெளிநாடுகளுக்கு | ஷை | ஷை | ஷை 2—8—0 |
| தனிப்பிரதி | ஷை | ஷை | ஷை 0—3—0 |

விஷய சூசிகை.


1. கிஸ்தி வசூல் ... 171
2. தஞ்சை ஜில்லா போர்டாரும் ஆலமரங்களும், 172
3. கும்பகோணம் பாங்கி லிமிடெட் ... 172
4. நன் கொடைகள் ... 173
5. கி உ. களும், ஸ்ரீமான் வேதாசலமய்யரும் ... 173
6. திருவாவடுதுறை ஆதினம் ... 173
7. கடிதங்கள் ... 174
8 இந்திய கிராம வாழ்க்கை ... 175
9 கிராம உத்தியோகஸ்தர்கள் ... 176
10. பண்டைத்தமிழரின் மேம்பாடு ... 179
11. கிராமவிவசாயச் சங்கங்கள் ... 181
12. பொங்கற்புதுநாள் ... 182
13. கிராமங்களில் வாலிபர்கள் ... 184
14. ராணாபிரதாப சிம்மன் or ரஜபுத்திர தேச பக்தி, 185
15. தஞ்சாவூர் ஜில்லா பிராம்மணர் மகா நாடு ... 187
16. கிராம உத்தியோகஸ்தர்கள் மகாநாடுகள் ... 191
17. தஞ்சாவூர் ஜில்லா கி. உ. சங்கம் ... 191
18. மன்னார்குடி தாலூகா கி. உ. சங்கம் ... 191
19. அரந்தாங்கி தாலூகா கி உ சங்கம் ... 191
20. கும்பகோணம் தாலூகா போர்டு எலக்ஷன் 192
21. ஓர் மோசம் ... 192
22. விஜயபுரத்தில் யூனியன் பாங்கின் கிளை ... 192
23 காலண்டர்கள் வரவு ... 193
24 தேவஸ்தானங்கள் ... 193
25. இந்து நேஷன் வருஷ அனுபந்தம் ... 194
26 கிராம உத்தியோகஸ்தர்களுக்கு மே. த கவர்னரின் பேட்டி ...


விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| பக்கம் 1 (2 கலம்) மீ 1-க்கு ரூ 10 | ஷை ½ (1 கலம்) ஷை ரூ 5 | கலம் ½-க்கு மீ 1-க்கு ரூ 2-8 | இஞ்சு 1-க்கு ஷை அணா 8 |

N. ஆபத்ஸஹாய ஐயர், பத்திராதிபர்.

கிராமானுகூலன் ஆபீஸ்:-கும்பகோணம்.

# கிராமானுகூலன்.

ஆதரணைக் கர்த்தர்கள்

ஸ்ரீமான் N. வெங்கட்டராம ஐயர் அவர்கள்.

ஸ்ரீமான் K. S. சிவசுப்பிரமணிய ஐயர் அவர்கள், M. L. C.,

போஷகர்

ஸ்ரீமான் T. S. துரைசாமி பிள்ளை அவர்கள்,

கிராம முன்சீப், திருப்பனந்தாள்.

## கிராமானுகூலன்.

சந்தா விபரம்.

| | | | |
|---|---|---|---|
| போஷகர்களுக்கு வருஷம் 1-க்கு ரூ. | 50 | 0 | 0 |
| அபிமானிகளுக்கு ,, ... | 15 | 0 | 0 |
| ஜீவிய சந்தா ... | 25 | 0 | 0 |
| வருட சந்தா இந்தியா, பர்மா, சிலோன் ... | 2 | 0 | 0 |
| அயல்நாடுகளுக்கு (சிங்கப்பூர், பினங்கு, மோரீஸ், நெட்டால்) ... | 2 | 8 | 0 |

பத்திரிகாபிமானிகள் போஷகர்களாகவும், அபிமானிகளாகவும், ஜீவிய சந்தாதாரர்களாகவும் சேர்ந்து ஆதரிக்கவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மானேஜர்.


கும்பகோணம் தென் இந்தியா

கன்பெக்ஷனெரி பாக்டரியில் தயாரிக்கப்படும்

பெப்பர்மெண்டையே உபயோகியுங்கள்!

என்?

ஏன் எனில் இந்திய மூலதனத்தைக்கொண்டு இந்தியர்களால் நடத்தப்படும் தொழிற்சாலை இதுவே வெகு தேர்த்தியானவை என்று புகழ்பெற்றது! விலை நயம்! ஒருமுறை தருவித்துப் பாருங்கள்! உண்மை விளங்கும்!

விவர விபரத்திற்கு உடனே எழுதுங்கள்!

**THE SOUTHERN INDIA CONFECTIONERY FACTORY, KUMBAKONAM.**



ரிஜிஸ்டர் நெ. M. 1930] உ வந்தேமாதரம். [வருட சந்தா ரூபா 2—0—0


# கிராமானுகூலன்.


(ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.)


20 MAR 1929

"ஒன்று பட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கேதுவேண்டும்."—பாரதி.

"நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."—ஔவை


| புத்தகம் 2 | விபவஞு தைமீ | ஸஞ்சிகை 9 |
|---|---|---|


223473

## கிஸ்தி வசூல்.

கிஸ்தி வசூல் செய்யும் விஷயத்தில் காட்டப்படும் கடுமையைப்பற்றி சென்ற வருஷம் நாம் எழுதியிருந்தும் இவ்வருஷமும் எழுதவேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது. கும்பகோணம் தாலூகாவில் இருசால் கெடுக்களை ஏற்கனவே பட்டாதார்கள் ஜாஸ்தியுள்ள வட்டங்களுக்கு பிந்திய தேதிகளும் குறைவாயுள்ள வட்டங்களுக்கு முந்தின தேதியுமாக ஏற்படுத்தியிருந்தார்கள். இவ்வருஷம் ஒவ்வொரு ரேஞ்சும் ஒரே தேதியில் இருசால் செய்யவேண்டுமென்று விதித்துவிட்டனராம் ஒரு ரேஞ்சில் சொல்ப பட்டாதார்களை யுடைய வட்டங்களும் அதிக பட்டாதார்களையுடைய வட்டங்களும் 11உயில் முதல் இருசாலும் 21உயில் இரண்டாவது இருசாலும் செய்துவிட வேண்டுமென்று கண்டிப்பான உத்திரவிடப்பட்டிருக்கிறது இதனால் கி. மு. க்கள் ஜாடைசெய்து இருசால் செய்யமுடியவில்லை. இந்த ஏற்பாட்டை எதற்காகச் செய்தார்களென்று விளங்கவில்லை. குமாஸ்தாவின் சவுகரியத்தை உத்தேசித்தா? இதனால் இந்த இரண்டு இருசாலுடன் நில்லாமல் 4, 5 இருசால்கள் செய்யும்படியாக ஏற்பட்டுவிட்டது 21உ இருசால் ஆனவுடன் பாக்கி விசாரணை என்று ஆடம்பரம் செய்யப்பட்டு 25உ மறுபடியும் இருசால் செய்யும்படி கி. மு விடம் எழுதி வாங்கப்படுகிறது 25உ இருசால் ஆனவுடன் பாக்கியுள்ளதை 28உ இருசால் செய்யும்படி உத்தரவு செய்யப்படுகிறது அதன் பிறகு 29, 30, 31உகள் வரையில் தினமானம் இருசால் செய்யும்படி செய்யப்பட்டிருக்கிறது இதன் பிரயோஜனம் என்ன! 28உயுடன் மாதக்கணக்கு கஜானாவுக்கு முடிந்துவிடுகிறது பிந்தி இருசால் செய்யும்படி நிர்ப்பந்திப்பதின் கருத்தென்ன? இதுவரையில் இம்மாதிரி நிர்ப்பந்தம் செய்யப்பட்டதேயில்லை 5 தடவை இருசால் செய்வதென்றால் 14, 16 நெ. கணக்குகளை 5 தடவை எழுதுவதா 5 தடவை கஜானாவில் பணம் செலுத்த வருகிறதாயிருந்தால் செலவு என்ன ஆகிறது கெவர்ன்மெண்டாருக்கு தினமானம் பணம் வந்துதான் ஆகவேண்டுமென்ற நிலைமை ஏதாவது ஏற்பட்டுவிட்டதா இது மகா கொடுமையாகவும் கஷ்டமாகவுமிருக்கிறது. மாசூல் ஐப்தி செய்யக்கூடாதென்றும் ஜங்கமசொத்துக்களையே ஐப்தி செய்யவேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறதாம் நிலவரிக்கு மாசூலைவிட ஜங்கம சொத்துக்களுக்கு முன்பாத்தியம் ஏற்படுமா? இது மிராசுதார்களை இம்சிக்கவேண்டுமென்றோ அவமானப்படுத்த வேண்டுமென்றோ கருதி செய்யப்படுவதாக எண்ண வேண்டியிருக்கிறதே ஒழிய வேறில்லை. தகுந்த யோக்கியதை உள்ளவர்கள் கிராம உத்தியோகஸ்தர்கள் வேலைக்கு வரக்கூடாதென்று சொல்லாமல் சொல்லுவதுபோல் கிஸ்தி வசூல் முறை கையாளப்பட்டு வருகிறது இம்முறை சீக்கிரம் ஒழியுமாக.

## தஞ்சை ஜில்லா போர்டாரும், ஆலமரங்களும்.

தஞ்சை ஜில்லாபோர்டார் தங்கள் பரிபாலனத்தின்கீழ் உள்ளரோட்டின் ஓரத்தில் வெகுகாலமாய் வைக்கப்பட்டு வந்திருக்கிற ஆலமரங்களை யடியோடு வெட்டிவிட்டு அதற்குபதிலாக தென்னை மரங்களை வைப்பதாக தீர்மானித்து திருவையாறு ரோட்டிலுள்ள ஆலமரங்களை யெல்லாம் ஏலம்போட்டு விட்டதாக அறிவிக்கப்படுகிறோம். என்னே! ஆச்சர்யம்! முற்காலத்தில் ரோட்டுகளுக்கு ஏற்றது ஆலமென்று பிரசித்தி பெற்றிருக்கிறது பாதசாரிகளுக்கு மிகஉபயோகமுள்ளது கடும் வெயிலை தாங்கமுடியாத பாதசாரிகள் தங்குவதற்கு ஆலமரத்தைவிட வேறு நிழல் கொடுக்கக்கூடிய விருக்ஷமேது அதனாலன்றோ

தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர் கயத்துட் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர்ப் புரவி யாட்பெரும் படையொடு
மன்னர்க்கிருக்க நிழலாகுமே!

என்று பாடப்பெற்றிருக்கிறது.

(Before the verse above, the page prints:)

தெம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
வானுற ஓங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க்கிருக்க நிழலாகாதே.

இக்கால நவீனநாகரீகத்தில் மோட்டார்சவாரி செய்கிறவர்களுக்கு பாதசாரிகளுக்கு ஏற்படுங்கஷ்டம் எப்படி தெரியப்போகிறது ஆலமரங்களைவெட்டிவிட்டு தென்னை மரங்களை வைப்பதால் சிறிது வரும்படிவருமென்று உத்தேசிக்கின்றார்கள்போலும். அதேமாதிரியாக புளியமரங்களையும் வைத்து வரும்படி சம்பாதிக்கின்றார்கள். ரோட்டானது சாகுபடி செய்து சம்பாதிப்பதற்காகவா ஏற்பட்டது. இந்தியாவில் விவசாயம்செய்வதற்கா இடமில்லை. ஜனசவுகரியத்துக்காக ஏற்பட்டரோட்டை அவர்களுக்கு இடையூறுவிளைவித்து வரும்படி சம்பாதிக்கமுயலலாமா? இனி ஆஸ்பத்திரி கட்டிடங்களையும் வாடகைக்குவிட்டால் நல்லவாடகை கிடைக்குமென்றுஎண்ணிவிடலாம். புளியமரங்கள் மகா உஷ்ணத்தை கொடுத்து அதின் நிழலில் அதிகமாக தங்குவோர்க்கு குஷ்டரோக முதலியபெருவியாதிகளை உண்டாக்குகிறதென்று வைத்திய சாஸ்திரங்கள் கூறுகின்றன. தென்னை மரங்கள் எவ்வளவு உபயோக முள்ளதாயும் இந்தியர்களால் போற்றப்படும் கற்பக விருக்ஷமாயிருந்தாலும் ரோட்டுகளில் வைக்கத் தகுதியுள்ளதல்ல. முதலாவது ரோட்டோரங்களில் வைக்கப்படும் மரங்களினால் பாட்டைசாரிகளுக்கு நிழல் கொடுக்கவேண்டும். தனித் தனியாகயிருக்கும் தென்னையின் நிழல் போதுமானதல்ல இரண்டாவது, அதன் மட்டைகள் பழுத்து அடிக்கடி விழுவதால் மிகுந்தஇடைஞ்சலுண்டாகும் தேங்காய், பழுத்து உதிர்ந்தாலும், மிகக்கெடுதலே. முன்னோர்கள் இவைகளையெல்லாம் யோஜித்தே ரோட்டுகளில் ஆலமரங்களையும், வேப்பமரங்களையும் ஏற்படுத்தினார்கள் வேம்பை விரும்பக் கரும் பாகும் என்றபடி, வேப்ப நிழலில் அடிக்கடி தங்குகிறவர்களுக்கு குஷ்டரோகமுதலிய பெருவியாதிகள் இருந்தாலும் நிவர்த்தியாவதோடு, நல்ல ஆரோக்கியமுள்ளவர்களாகவும்ஆகிறார்களென்று வைத்திய சாஸ்திரம் கூறுகிறது ஜில்லாபோர்டு அங்கத்தினர்கள் தங்கள் தீர்மானத்தை புனராலோசனை செய்து ஆலமரங்களை வெட்டாமல் இருக்கும்படி செய்வார்களென்றும் இனிவரும்படியே பிரதானமாகக் கருதாமல் ரோட்டுகளில் ஆலமரங்களையும், வேப்பமரங்களையும் உற்பத்தி செய்யும்படி தீர்மானிப்பார்களென்றும் நம்புகிறோம்.

---

## கும்பகோணம் பாங்கி, லிமிடெட்,

இந்த பாங்கியின் வருஷாந்தரக் கணக்கும் பாலன்ஸ் ஷீட்டும் நமது பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. சென்ற வருஷத்தில் இந்த பாங்கில் சமார 9லக்ஷரூபாய் வரையில் பொது ஜனங்களால் டிபாசிட் செய்யப்பட்டிருக்கிறது. நிகர லாபம் 36 ஆயிரம்ரூபாய் வரையில் கிடைத்திருக்கிறது ரிசர்வ் பண்டில் ஒரு லக்ஷம் ரூபாய் சேர்ந்திருக்கிறது. இந்த பாங்கின் நல்ல நிலைமையை காட்டுவதற்கு இவைகளே போதிய அத்தாட்சியாகும். பங்குதாரர்களுக்கு 16% லாபம் கிடைத்திருக்கிறது. கவர்ன்மெண்டு டிபாசிடின்மேல் ஓவர்டிராப்ட் கொடுப்பதும் தானியங்களின்மேல் கடன் கொடுப்பதும் இவ் வருஷம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது மிக சவுகரியமானதே. செக்ரிடரி ஸ்ரீமான் S மகாலிங்கய்யர் அவர்கள்; இந்த பாங்கின் விஷயத்தில் மிகுந்த சிரத்தையுடன் பாடுபட்டுவருவதே இவ்வளவு முன்னேற்றத்திற்கும் காரணமாகும்..

---



## நன் கொடைகள் :

நமது கிராமானுகூலன் பத்திரிகைக்கு அடியிற் கண்ட கனவான்கள் அன்புடன் நன்கொடைகள் அளித்திருப்பதைவந்தனத்துடன் ஏற்றுக்கொண்டோம்.

| | | |
|---|---|---|
| ஆனரபிள் S. முத்தையா முதலியாரவர்கள் M.L.C. (முதல் தடவையாக) | ரூ | 20 |
| சிவனாண்டார்கோவில் ஸ்ரீமான் V. R. ராமய்யரவர்கள் B.A., | ,, | 25 |
| மருதாநல்லூர் ஸ்ரீமான் R. சூரிய நாராயணமூர்த்திஐயரவர்கள் | ,, | 27 |
| மன்னார்குடி தாலூகாபோர்டு V.P. ஸ்ரீமான் A. குப்பையா முதலியாரவர்கள் | ,, | 25 |
| ராவ் சாகிப் C. R. லெக்ஷிமிநரசிம்ம அய்யங்கார் அவர்கள் (முதல்தடவையாக) | | 10 |
| ஸ்ரீமான் V. சாமிநாத முதலியார் | ,, | 20 |
| ,, S.M. ராஜகோபாலய்யங்கார் அவர்கள் | | 10 |
| ,, V. S. ராமதுரை அய்யர் அவர்கள் | ,, | 5 |
| ,, I ரகீம்கான்சாகிப் பகதூர் அவர்கள் | | 5 |

நண்பர்கள் தங்கள் தங்களா லியன்ற பொருள் உதவி அளித்து கிராமானுகூலனை ஆதரித்து மாதமிருமுறை பத்திரிகையாக சீக்கிரம் வெளிவரும்படி உதவிபுரியவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தயவுசெய்து சந்தாதாரர்கள் தங்கள் சந்தாத் தொகைகளை உடனே அனுப்பும்படியும் தக்களாலியன்ற நன்கொடையளிக்கவேணுமாயும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

### கிராம உத்தியோகஸ்தர்களும், ஸ்ரீமான் வேதாசலமய்யரும்.

ஐக்ய நாணயச்சங்கங்களின் ரிஜிஸ்டிராராகயிருந்து பென்ஷன்வாங்கிக்கொண்ட ஸ்ரீமான் வேதாசலமய்யர் கிராமபுனர் உத்தாரணவேலை என்ற மகுடமிட்டு ஹிந்துபத்திரிகையில் ஒருவியாஸம் எழுதியிருப்பதில் கிராமஉத்தியோகஸ்தர்களை அனுவசியமாக மிகவுந்தாக்கி எழுதியிருப்பதாக நமக்கு ஸ்ரீமான் ஜி. கிருஷ்ணசாமிய்யர் ஒருகடிதம் எழுதியிருக்கிறார். இடமின்மையால் அடுத்த சஞ்சிகையில் வெளிவரும். ஸ்ரீமான் வேதாசலமய்யர் முசிரி டிவிஷன் டிப்டிகலெக்டராயிருந்த காலத்தில் 1906-1907 இவ்வருஷத்தில் கிராம உத்தியோகஸ்தர்கள் சம்பளவிஷயமாய்கெவர்ன்மெண்டாருக்கு செய்துகொண்ட மகஜரின்பேரில் அபிப்பிராயம் தெரிவிக்கும்படி எல்லா டிவிஷனல் ஆபீஸர்களையும் கேட்டிருந்தபோது கர்ணங்களுக்கு சம்பளத்தை உயர்த்தக்கூடாதென்றும் கர்ணங்களைப்பற்றி தூஷணமாகவும் ரெவினியூபோர்டாருக்கு ரிபோர்ட்டு செய்தாரென்றும்கேள்விப்பட்டிருக்கிறோம். அன்னாருக்கு கர்ணங்களிடம் வெகுகாலமாகவே துவேஷம் உண்டாயிருப்பதற்கு காரணமென்னவோநாம்அறியக்கூடவில்லை. பின்னால் பெரும்பதவிகளை வகித்தும் அந்த துவேஷ புத்திமாராத காரணமும் தெரியவில்லை.

---

### திருவாவடுதுறை ஆதீனம்.

திருவாவடுதுறை ஸ்ரீ கோமுக்தீஸ்வர சுவாமி உத்ஸவமும், திருவடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கஸ்வாமி தைப்பூச உத்ஸவமும் இவ்வருஷம் மிகச்சிறப்பாக நடந்தேறியது ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தேரோட்டும்விஷயத்திலும் உத்ஸவத்தை சிறப்பாக நடத்திவைக்கவேண்டிய விஷயத்திலும் தேகசிரமத்தை சிறிதும்லக்ஷியம்செய்யாமல் பனி, வெயில்என்பதையும் கவனியாது நேரில் இருந்து ஒவ்வொரு காரியத்தையும் தாமே கவனித்து செவ்வனே நடத்தியது ஜனங்களால் மிகவும் போற்றப்பட்டது.

திருவாவடுதுறை ஆதீனம் ஆதி ஸ்ரீநமசிவாய மூர்த்திசுவாமிகளின் குருபூஜை மகோத்ஸவம் இவ்வாண்டு மிகச்சிறப்பாக நடந்தது அன்று ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பட்டணப்பிரவேசகாட்சியானது நவீனநாகரீக காஸ்லைட்டை விலக்கி, புராதனமான அழகு பொருந்திய தீவட்டிகளை ஏராளமாய் போட்டிருந்ததினால் மிகப்பிரகாசித்து விளங்கியது. கொலுவீற்றிருக்கை அன்பர்களின் மனதை பரவசமாக்கியது வந்திருந்த வித்வான்களுக்கும் ஏனையோருக்கும் தகுந்த சன்மானங்களும் அளிக்கப்பட்டது. ஒவ்வொரு விஷயங்களையும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம்அவர்கள் நேரில்கவனித்து நிர்வாகத்தை மிக திறமையுடன் நடத்திவரும் பான்மையைக்கண்டு ஆச்சரியப்படாதவர்களில்லை ஒழுக்கத்திலும்பக்தியிலும் மிகச்சிறப்புடன் விளங்கும் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ வைத்திலிங்க பண்டார சந்நிதி அவர்கள் நீடூழி வாழ்க.

# கடிதங்கள்.

—*—

## I

அன்பு மிகுந்திடும் பத்திராதிபர் அவர்களுக்கு:- தங்களால் எனக்கு அனுப்பப்பட்ட கிராமானுகூலன் டிசம்பர் மாதத்திய பத்திரிகையை அதிலுள்ள விஷயத்தின் சாரத்தை உத்தேசித்து ஒரு முறைக்கு இருமுறை நன்கு வாசித்து சிற்றறிவிற்கெட்டின விஷயங்களைக்கொண்டு பசிதெரியாமல் ஆனந்தமடைந்தேன். மேல்சொன்ன விஷயமானது முகஸ்துதியானது என்று எண்ண தங்களுடைய அகளங்கமான மனதானது இசையாதென நம்புகிறேன். நான் சுமார் 3 வருஷங்களாக கி. மு. வேலைபார்த்து வருவதனால் மேல் மேலும் என் புத்தி விசாலமாக தங்கள் பத்திரிகையை வரவழைக்க பூர்ண அவா இருந்தும் இதுசமயம் தங்கள் பத்திரிகையில் கி. மு விஷயமான 153 வது பக்கம் 3வது பாராவில்கண்டபடி எனக்கும் வீண் அபவாதம் ஏற்படாமல் இருக்கும்படி செய்துகொள்ள எனக்கு அபேக்ஷை இருப்பதால் 1929ஸ்ரீ ஜனவரிமீ அல்லது பிப்ரவரிமீ என் வருஷசந்தாவை அனுப்பி பத்திரிகையை பார்க்க ஆவலுள்ளவனாயிருக்கிற விஷயம் தெரிவித்துக்கொண்டேன். 153வது பக்கம் 5வது பாராவில் கண்டபடி மாதம் இருமுறையாகவே பத்திரிகையை கூடியசீக்கிரம் பலதனவான்களின் பொருளுதவியைக்கொண்டு வெளியிட்டால் நலமென நான் நினைக்கிறேன். பாபநாசம் தாலூகாவில் உள்ள கி. உ. க்களுக்கு நன்கு புத்திவரும்பொருட்டு அங்கங்கு கி. உ. சங்கம் ஏற்பட்டு வேலை செய்வதில் முயற்சி உண்டாக்கும்படி தங்கள் பத்திரிகையில் ஒரு வியாஸம் எழுதவேண்டியதாக தங்கள் பாதமாகுமெனவும் கேட்டுக்கொள்ளுகிறேன். அ. தா. கி. உ சங்கத்தில் 3வது பாராவில் கண்ட பிரரேபணைப்படி கி. மு. க்களுக்கு சமசம்பளமும் ஸமாபந்திபடியும் பேட்டாவும் கொடுக்கவேணுமென்றும், எல்லா தாலூக்காக்களிலும், எல்லா மாகாணங்களிலும், கி. உ. சங்கம் ஏற்பட தங்கள் பத்திரிகை தான் அனுகூலமானது. அதன் மூலம் பிரசுரிப்பீர்களென நம்புகிறேன். சந்தாசெலுத்தி பத்திரிகை வரவழைத்துக்கொள்ள தயாராகயிருக்கிறேன். இஷ்டன்,

S. வெங்கட்டருமய்யர்,
கிராமமுன்சிப், 48 நெ. வடக்குப்பட்டம்.

## II

அநேக நமஸ்காரம் உபயக்ஷேமம்.

தாங்கள் கிராம உத்தியோகஸ்தர்கள் விஷயமாய் பாடுபட்டு வருவது எல்லா கி. உ. க்களுக்கும் நன்றாய்தெரிந்தவை ஆனால் வருஷம் 1 க்கு இச்சிறு சந்தாவாகிய ரூ. 2 ஐ கொடுக்கமுடியாமல் வி. பி யை திருப்பி விட்டவர்கள், இனியாவது ஆதரிப்பார்களாக. தங்கள் 8வது சஞ்சிகை 153 வது பக்கத்தில் பிரசுரித்தபடி மாதமிருமுறை பத்திரிகையாக ஏற்படுத்துவதில் என்னைப்போன்ற ஸகோதரர்களுக்கும் அது பொருத்தமாகவேதான் இருக்கும். நானும் என் ஸகோதரர்களுக்கும் சொல்லிக் கூடிய வரையில் பின்வாங்காமலிருக்கவும், புதியசந்தாதார்களை சேர்க்கவும் முயலுகிறேன். தாங்கள் இந்த விஷயத்தில் எடுத்துக்கொண்டிருக்கும் சிரமத்திற்கும் விஸ்வாசத்திற்கும் கடவுள்தான் தங்களை ஆதரித்து நீடூழி வாழச்செய்ய வேண்டும் தங்கள் பேட்டி எனக்கு கிடைக்காவிட்டாலும் தங்களால் வெளியிடப்படும் பத்திரிகையின் மூலமாய் கண்குளிரப்பார்த்து ஆனந்தமடைந்து வருகிறேன்.

தங்கள் அன்புள்ள
N. R. ஸந்தானம் அய்யங்கார்,
கர்ணம், தாழனூர், அரந்தாங்கி தாலூகா.

## III

அன்பார்ந்த ஐயா,

தங்களுடைய பாலசந்திர பற்பொடியின் விலைவிபரத்தை எனக்கு மறுதபாலில் தெரிவிக்கவும் கொஞ்சம் மாதிரியும் அனுப்பிவைக்கவும். நான் என்னுடைய சிநேகிதர்களுக்கும், சகபாடிகளுக்கும் சிபார்சு செய்து தங்களுடைய பற்பொடியையே வாங்கும்படியாக செய்கிறேன்.

ஹோஸூர் தாலூகா கர்ணங்கள் சங்கத்தில் தங்கள் கிராமானுகூலன் பத்திரிகையில் 5 சஞ்சிகை வரவழைக்கும்படி தீர்மானிக்கப்பட்டிருக்கிறது, மற்றவை அடுத்த லெட்டரில் எழுதுகிறேன்.

தங்கள் N. S. வெங்கட்டரமண ராவ்,
கர்ணம், நாகமங்கலம்.
அஸிஸ்டெண்டு செக்ரிடரி,
ஹோஸூர் தாலூகா கர்ணங்கள் சங்கம்.



# இந்திய கிராம வாழ்க்கை.

(ஸ்ரீமான், V. ஸந்தானம், B.A., L.T., எழுதுகிறார்.)

சுமார் இரண்டாயிரம் வருஷங்கட்கு முன்பு மௌரிய அரசர்கள் காலத்தில் பாடலீபுரத்தில் வசித்திருந்து, நமது தேசத்தைச் சுற்றிப்பார்த்து, தாம் கண்ணாரக்கண்ட விஷயங்களைச் சரித்திர ரூபமாக எழுதி வைத்த யவன ஆசிரியர் மெகஸ்தனீஸ் என்பாரது பழைய பிரதிகளிலிருந்து இந்து தேச கிராம வாழ்க்கையைப்பற்றி அன்னார் கொண்டுள்ள அபிப்பிராயம் இன்னதென்று நன்றாகத் தெரிந்து கொள்ளும் பொருட்டு இந்தியாவின் நாகரீக மேன்பாட்டிற்கே இந்து கிராமங்களின் செல்வப்பெருக்கும், கிராமத்தார்களின் உயர்ந்த குணாதிசயமுமே காரணமென்று எழுதிவைத்திருக்கிறார். அழகிற்சிறந்தது 'கைபுனைந்தியற்றா கவின் பெறுவனப்பு' யென்றார் அறிவிற்சிறந்த நம் நக்கீரனார். அதுவேபோல் இயற்கையழகையே தன்னழகாகக்கொண்ட நம் இந்திய கிராமங்கள், 'உழுதுண்டு வாழ்வதற்கினிதில்லை கண்டீர்' என்பதையே மேற்கோளாகக்கொண்டு விவசாய வாழ்க்கையையே தம் சிறந்த தொழிலாகக் கையாண்டு வந்தன. தற்காலத்தே நாட்டுச் சுகாதாரத்தை விருத்திசெய்யும் அறிவாளிகள், மனிதன் சூரியன் உதியாமுன் எழுந்திருக்க வேண்டும். நல்லஉணவுகளை உண்ண வேண்டும், நல்ல நீர் பருகவேண்டும், என்றும் இப்பேர்ப்பட்ட அருமையான விதிகளையெல்லாம் எடுத்துப்பாமரஜனங்களுக்குப் போதித்து வருகின்றனர். நம்கிராம ஜனங்களோ விவசாயிகளானதால் அதிகாலையில் எழுந்து தன்னுழு நிலங்கட்குச் செல்ல வேண்டியதவசியமாய் ஏற்பட்டது. கதிரவன் தன் கிரணங்களை பரப்பிக்கொண்டு உதிக்குங்கால் நீலப்போர்வையென அழகு செய்திருக்கும் வானம் தன் மனத்தைக் கொள்ளவும், கை தன் உழவைக் கொள்ளவும் அகத்தடங்கிய இருளகல உள்ளுணர்ச்சி யெழ மெய் மறந்தவனாய் நம் கிராமக்குடியானவன்,

உலகு குளிர வெமதமதியில் ஒழுகுமமுத
கிரணமே
உருகுமடியரிதயநெகிழஉணர்விலெழுநலுதயமே
கலையு நிறையு மறிவுமுதிர முதிருமதுரநறவமே
கழுவு களர்முழுகநெடியகருணைபெருகுசலதியே
அலகில் புவன முடியும் வெளியில் அளியுமொளி
யினிலயமே
அறிவுளறிவையறியும வரும்அறிய வரியபிரம்
மமே

என்று நம்மிறைவனைப்போற்றுநிற்கின்றான்.

இறைவனை தரிசித்து நிற்போன், உயிர்கள் தோறும் கரந்துஉறையும் அந்தஉத்தமனை சகல ஜீவராசிகளிடத்தும் காண்கின்றான். அப்பொழுது அன்பென்பது அகத்திடத்து ஊற்றெடுத்து ஆறுகப்பெருகி ஓடாநிற்கின்றது. அறிவில் சிறந்தது "வாலறிவன் நற்றாள் தொழல்" என்றார். அப்பேர்ப்பட்ட அறிவை இயற்கையிலேயே அமையப்பெற்ற நம்கிராமத்திலிருக்கும் சகோதர சகோதரிகளை குணத்தில் உயர்ந்தோர் என்று மெகஸ்தனீஸ் எழுதிப்போந்தது மிகையாகாதே.

பலதேசங்களோடு ஒத்திட்டுப் பார்த்தால் லட்சக்கணக்கான கிராமங்கள் இந்துதேசத்தில்தான் இருக்கின்றன; தொழில் வகையில் கணக்கிட்டுப்பார்த்தால் நம்மிந்தியாவில் நூற்றுக்கு எழுபத்துநான்குபேர் விவசாயத்தையே தங்கள் ஜீவனத்துக்குறிய தொழிலாகக்கொண்டிருக்கின்றனர். இங்கிலாந்தைப்போன்ற நாடுகளெல்லாம் இரும்பையும் நிலக்கரியையும் கொண்டு என்னதான் கைத்தொழிலை விருத்தி செய்திருந்தபோதிலும் தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருளுக்கு அயல் நாட்டாருடைய தயவைப் பெறவேண்டியிருக்கின்றது, நம்தேசத்து ஜனங்கள் உணவுப்பொருளை வேறுதேசங்களிலிருந்து வரவழைக்க வேண்டியதவசியமில்லை.

பண்டைகாலத்தே நாம் சுகமாக வாழ்ந்தோம். காரணமென்ன? பண்டைக்கிராமங்கள் குடிமக்களுக்கு வேண்டிய உணவுப்பொருளைக் கொடுத்தன. கிராமத்தார் ஒற்றுமையாய் நிம்மதியாய் வாழ்ந்தார்கள், கிராம கைத்தொழில்கள் நன்கு கவனிக்கப்பட்டு வந்தன. தற்போது ஜாதிச்சண்டையாலும், சமயச்சண்டையாலும், எங்கும் நம் நாடு ஒற்றுமையிழந்து பரிதவிப்பதுபோல், அக்காலத்தே ஒன்றும் கிடையாது. ஒவ்வொரு கிரா

மமும் ஒற்றுமைப்பட்ட ஒவ்வொரு பிரிவாக (Territorial Unit) வே இருந்து வந்தது.

கிராமந்தோறும் கிராம ஆலயமுண்டு, கிராம பள்ளிக்கூடமுண்டு, கிராம பஞ்சாயத்துண்டு, கிராமத்தார்க்குப் பொதுவான நிலமுண்டு, ஒவ்வொரு கிராமத்தார்களும் தங்கள் காரியங்களைத் தாங்களே கவனித்து வந்தார்கள். கிராம மணியக்காரரும், கணக்குப்பிள்ளையும் கிராமத்தாருக்கு அனுகூலமாய் கிராமப்பஞ்சாயத்திற்குக் கீழ்பட்ட உத்தியோகஸ்தர்களாய் இருந்து கிராம விஷயங்களைக் கவனித்து வந்தார்கள் எனவே பண்டைக்கால கிராமவாசம் சீரும் சிறப்பும்பெற்றிருந்தது.

தற்காலத்தே நம் நாட்டின் முன்னேற்றத்தைக் கருதி வரும் பெரியோர்பலர் கிராமப்புனர் உத்தாரணம் (Rural Reconstruction) என்ற விஷயத்தில் அதிக ஊக்கம் செலுத்திவருகிறார்கள். கிராமப்புனர் உத்தாரணத்தில் ஊக்கமெடுத்துக்கொண்டு வேலைசெய்வதற்கு முன் காலத்தில் இந்திய கிராமங்களின் நிலைமையைப் பற்றிய சரித்திரத்தையறிய வேண்டியது அவசியம். அதையொட்டியே அறிவிற்சிறந்த நம் விவேகானந்தரும் என்றும் அழியாத நம் பழைய சரித்திரமாகிய அருவியில் நீர்பெருகி தீர்க்க திருஷ்டியுடன் நம்இந்தியாவின் எதிர்காலவாழ்வை உணர்ந்து பண்டைகாலத்தை விடவும் சந்தோஷமுடையதாய், மேன்மையுடையதாய், சிறப்புடையதாய பாரதகண்டத்தை ஆக்குவீர்கள்! நம் பழைய சரித்திரத்தை ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டியது முக்கியம் நம் ரத்தத்தில் ஊறும் சக்தியின் தன்மையை உணரவேண்டும். நம்முன்னோரியற்றிய அரும்பெருஞ்செயல்களை அறிந்து அவர் பெருமையில் நம்பிக்கையுடையோராய் நம் தாய்நாட்டை முன்னிலும் பன்மடங்கு மாட்சிமையுடையதாய்ச்செய்யவேண்டும் என்று கூறியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. உட்ரூவில்ஸன் என்ற அமெரிக்கத்தலைவரும் ஒவ்வொரு தேசத்தாரும் தங்கள் பழைய சரித்திரத்தை ஒட்டியே வளருகிறார்கள் என்று கூறியுள்ளார். Professor ராதாகுமட்குமர்ஜி நம் இந்திய ஜனநாயகத்துரைத்தனத்திற்கு அஸ்திவாரமாக அமைந்த ஒற்றுமைப்பட்ட கிராமவாசத்தைப் புதுப்பிக்காதஎந்த விதமான துரைத்தனமாறுபாடும் இந்தியாவிற்குத் திருப்தியை அளிக்காது என்று சொல்லியிருப்பதினின்றும் இனிய கிராம வாழ்க்கை இந்த தேசத்தின் இன்பத்திற்கே என்பது விளங்குகின்றது. அதனால் நாம் பண்டைக்கால கிராமவாசங்களைப்பற்றி நன்றாகத் தெரிந்து கொள்ளவேண்டியது முக்கியம். இனி வரும் வியாசங்களில் அவற்றைப்பற்றிக் கொஞ்சம் கொஞ்சமாகவிவரிக்கப்படும்.

# கிராம உத்தியோகஸ்தர்கள்.

(ஸ்ரீமான், K. S. லெக்ஷ்மண ராவ், கிராம முன்சீப், கறகதஹள்ளி, தர்மபுரி தாலூகா).

நான் சென்ற சில வருஷங்களாக கிராம உத்தியோகஸ்தர்களிட இயக்கத்தில் ஈடுபட்டு அவர்களின் முன்னேற்ற விஷயமாய் என்னால் கூடிய மட்டில் உழைத்து வந்தேன். ஆனால் துர் அதிருஷ்ட வசமாக கிராம உத்தியோகஸ்தர்களிடம் ஒற்றுமையில்லாக் குறைவாலும், சிரத்தையில்லாமை கண்டும் ஒருவாறு அலுப்படைந்து கொஞ்சகாலமாக கிராம உத்தியோகஸ்தர்களிட இயக்கத்திலிருந்து விலகிக்கொண்டு விட்டேன். இப்போது என்னுடைய ஜில்லாவிலுள்ள பல கிராம உத்தியோகஸ்தர்களான நண்பர்களும் வெளிஜில்லா கி-உ-நண்பர்களும் நான் மறுபடியும் கி. உ. க்களிட இயக்கத்தில் சேர்ந்து உழைக்க முன்வரவேணுமென்று கோரிப் பல கடிதங்கள் எனக்கு எழுதிவருகின்றார்கள். அவர்கள் என் பேரில் வைத்திருக்கும் அன்புக்கும் நம்பிக்கைக்கும் நான் மிகவும் நன்றியுள்ளவனாகயிருப்பதுடன், என் பேரில் அவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரனாக நான் நடந்து கொள்வேன் என என்னுடைய சகோதர கி. உ. க்களுக்கு உறுதி கூறுகின்றேன். இப்போது துர் அதிர்ஷ்ட வசமாகச் சில இடங்களில் கிராம உத்தியோகஸ்தர்கள் பிளவு பட்டுக்கொண்டு கிராம பெரியதனக்காரர்கள் வேறாகவும், கர்ணங்கள் வேறாகவும் சங்கங்களை ஸ்தாபித்துக்கொண்டு ஒருவருக்கொருவர் போட்டியாக வேலைசெய்து வருகிறார்கள். இவ்விதமாக கர்ணங்களும் கி-மு-க்களும் தனித்துச்சங்கங்களை



ஸ்தாபித்துக் கொண்டு வேலை செய்வதில் இருதரத்தவரில் யாருக்கும் நன்மை ஏற்படப் போவதில்லை என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

ஆகையால் தனிச்சங்கங்கள் ஸ்தாபித்துக் கொண்டு வேலைசெய்துவரும் கி-உ-க்கள் தங்கள் வேற்றுமைவிதியாசங்களையொழித்து முன்போல்ஒற்றுமையுடன் கி-உ-க்கள் முன்னேற்றத்திற்காக பாடுபடவேணுமாய் சகோதர கி-உ-க்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நமது மாகாண சங்கத்தலைவர் ஸ்ரீமான் பி. சுப்பய்யா பிள்ளை அவர்களும், தென்ஆற்காடு நண்பர் ஸ்ரீமான் கோதண்டராமய்யர் அவர்களும் 12-ந்தேதி மித்திரனில் கிராம உத்தியோகஸ்தர்களைப்பற்றி எழுதியிருக்கும் கடிதங்களைப் படித்துப்பார்த்து நமது தலைவரிட வேண்டுகோளைப் பூர்த்தி செய்யும்படியாக எல்லாச் சகோதர கி-உ-க்களையும் கேட்டுக் கொள்ளுகிறேன். இச்சமயத்தில் நமது மாகாண மகாநாட்டைச் சென்னையில் கூட்டி மகாநாட்டை மேன்மை தங்கிய கவர்னர் பெருமானைக் கொண்டு திறந்து வைப்பது மிகவும் சிரேஷ்டமாகும். மகாநாட்டை கூட்டுவதோடு கூட மேன்மை தங்கிய கவர்னர் பிரபுவிடம் நமது சங்க டெபுடேஷன் போய் நமது குறைகளையும் கஷ்டங்களையும் உள்ளது உள்ளவாறு முறையிட்டுக்கொண்டால் நமது குறைகள் நிவர்த்தியாகி விடுமென்று நான் உறுதியாய் நம்புகின்றேன். கவர்னர் பெருமானைப் பேட்டிகாணும் விஷயமாயும், மாகாண மகாநாட்டைக் கூட்டும் விஷயமாயும் நமது தலைவர் ஸ்ரீமான் சுப்பைய்யாபிள்ளை அவர்களும் காரியதரிசி ஸ்ரீமான் ராமானுஜதாதாச்சாரியார் அவர்களும் எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சி மிகவும் போற்றத்தக்கது. அவர்களுக்கு கி-உ-க்கள் அனைவரும் மிகவும் கடமைப் பட்டிருப்பதுடன் அவர்கள் கோரும் உதவியைச் செய்யும்படியாக எல்லா சகோதர கி-உ-க்களையும் கேட்டுக் கொள்ளுகிறேன். நமது சம்பள உயர்வைப் பற்றிச் சட்டசபை தீர்மானம் செய்திருந்தும் கவர்ன்மெண்டார் நமக்குச் சம்பள உயர்வைக் கொடுக்கவில்லை என்று சில நண்பர்கள் எழுதி வருகின்றார்கள். நமது சம்பள உயர்வைப்பற்றி சட்ட சபை தீர்மானம் செய்திருப்பதை அமுலுக்குக் கொண்டு வருவதில் கவர்ன்மெண்டுக்குக் கஷ்டம் இருக்கக்கூடும் என்று நான் நினைக்கிறேன். கி-உ-க்களுக்கு ரூ 15 ஆகவும், சிப்பந்திகளுக்கு ரூ 10 ஆகவும் சம்பளம் கொடுக்கவேண்டுமென சட்டசபை தீர்மானித்திருக்கின்றது. கி. உ. க்களுக்குக் குறைக்கப்பட்டிருக்கும் ஒன்றிரண்டு ரூபாய் சம்பளம் சேர்த்துக் கொடுப்பதற்கே கவர்னமெண்டில் பணம் இல்லை என்றும் பொதுச் சிப்பந்திகள் நபர் 1-க்கு ரூ 3-8-0 அதிகப்படியாகச் சேர்த்துக் கொடுக்க ஏராளமான தொகை கவர்ண்மெண்டிற்கு வேண்டியிருக்கும். இவ்வளவு பணம் கவர்ண்மெண்டில் இல்லாமலிருக்கிறபடியால்தான் நமக்குச் சம்பள உயர்வு கொடுக்கக்கூடவில்லையோ என்பது என்னுடைய சந்தேகம். இரண்டு பசலிகளாக கிராம உத்தியோகஸ்தர்களுக்கு ஜமாபந்தி அலவுன்ஸைக் கொடுப்பது நிறுத்திவிடப்பட்டிருக்கின்றது. ஆனால் சிப்பந்திகளுக்கு மட்டுமே ஜமாபந்தி அலவுன்ஸ் கொடுக்கப்பட்டு வருகின்றது. ஜமாபந்தி காலங்களில் சிப்பந்திகள் எவ்விதமான செலவுகளுக்கும் கஷ்டங்களுக்கும் உள்ளாகின்றார்கள் என்பதும் கிராம உத்தியோகஸ்தர்கள் எவ்விதச் செலவுகளுக்கும கஷ்டங்களுக்கும் உள்ளாகின்றார்களென்பதும காருண்ய கவர்ண்மெண்டார் அறியாத விஷயமன்று. ஜமாபந்திகாலங்களில் கி-உ-க்கள் தங்களிட வீடு வாசல் பெண்டு பிள்ளைகளையும விட்டு தாலூகா ஹெட்குவார்ட்டரில் கடன் வாங்கி ஒட்டல்களில் சாப்பிட்டுக் கொண்டு ஜமாபந்தி கணக்குகளை முடிவு செய்வதுடன் ஜமாபந்தி காலத்தில் அந்தகிராமத்துக்குச் சம்பந்தப்பட்ட நிர்வாக சம்பந்தமான சகலகேள்விகளுக்கும கி-உ-க்கள் ஜவாபுசொல்லக்கடமைப்பட்டிருக்கின்றார்கள். ஜமாபந்தியில் இத்தகைய பொறுப்புடன் வேலைசெய்யும் கி-உ-க்களுக்கு ஜமாபந்தி அலவுன்ஸ் கொடுக்காமல் ஜமாபந்தியின் போது ஆஜராகும் சிப்பந்திகளுக்கு மட்டும் அலவுன்ஸ் கொடுப்பது கி-உ-க்களைக் கேவலப் படுத்துவதாகும் ஜமாபந்தி அலவன்ஸ கொடுக்கும் பக்ஷத்தில் கி-உ-க்களுக்கும் கொடுக்கவேண்டும். அம்மாதிரி கொடுக்க கவர்ண்மெண்டில் பணமில்லையானால் சிப்பந்திகளுக்குக் கொடுக்கும் ஜமாபந்தி அலவென்ஸையும் நிறுத்திவிட வேண்டும். இதனால் மிச்சப்படும் தொகையுடன் இன்னும் சிறிது தொகை சேர்த்து முன்கேள்படி சம்பளம் கொடுப்பதற்கு அவ்வளவு கஷ்டமிராது இவ்விஷயத்தை காருண்ய கெவர்மெண்டார் கவனித்து நியாயம் செய்ய செய்யவேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன் நாம் நம்மைப் பற்றிய விஷயங்களை மட்டும் கவனித்துக் கொள்ளவேண்டும். இதர விஷயங்களையும் நாம பகுத்து கொள்வதால் நமக்கு இம்மாதிரியான கஷ்டங்கள் ஏற்படுகின்றன. நமக்குள்ள குறைகளைப் போக்கிக்கொள்ள நம்முள் ஒற்றுமை மிகவும் அத்தியாவசியம் என்பதை ஒவ்வொருவரும உணரவேண்டும அப்போதுதான் நம்முடைய குறைகள் நீங்கும என்பது என்னுடைய அபிப்பிராயம் நம்முடைய குறைகளை போக்கிக்கொள்ள இன்னொரு யோசனையும் எனக்கு தோன்றுகிறது அதாவது

நம்முடைய சங்க டெபுடேஷனை ஏற்கும்படி ஸைமன் கமிஷனுக்கு மனுப்போட்டு கொள்ளலாம் என்பது. நாம் மனுச்செய்து கொண்டு சமக்ஷ ஸைமன்கமிஷன் முன்பாக ஆஜராகச் சந்தர்ப்பம் கொடுக்கும் பக்ஷத்தில் நம்முடைய குறைகளை கமிஷன் மூலமாய்க் கவர்மெண்டிற்குத் தெரிவிக்கக் கொள்ள வேண்டுவதாயிருப்பதுடன், கிராம வாழ்க்கை சம்பந்தமான சீர்திருத்தங்களுக்கு நம்முடைய ஆலோசனைகள் கமிஷனுக்கு உதவியாகவும் இருக்கக்கூடும். இவ்விஷயத்தைப்பற்றிக் கவனித்து வேண்டியதைச் செய்யவேண்டுமாய்த் தலைவர் ஸ்ரீமான் சுப்பையா பிள்ளையைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கவனியுங்கள் ! கவனியுங்கள் !!

அநேக வைத்தியர்களும், ஹக்கீம்களும், எங்கள் ஔஷதங்களை வாங்கி சொந்த ஔஷதங்களைப்போல் வேறு நாமங்களைச் சூட்டி விற்பனை செய்துவருகிறார்கள்.

சந்திரப்பிரபா மாத்திரைகள்.

தீவிரமான வெள்ளை, (வெட்டை) மூத்திர நாளங்களில் எரிச்சல், மூலம், நீர்ச் சுருக்கு இவைகட்கு பரம ஔஷதம்! ஸ்திரீ ரத்னங்களுடைய வியாதிகளுக்கு நிகரற்ற ஔஷதம்.

16 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ 1—0—0தான்!
கேட்போருக்கு காட்லாக் இனும்! உடனே எழுதுக!!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
நெ. 26, பிராட்வே, மதராஸ்.

ஒரு மகானால் அடியேனுடைய முன்னோற்கு அளித்த முறைப்படி அவர்களால் கையாண்டு சௌக்கியத்தையடைந்தாம், அடியேனும் கையாண்டு நன்மைகள் அடைந்திருக்கிறதுமான

சகலவித குஷ்டம்

குன்மம், காசம், நீர்ரோகம், யானைக்கால், கொடிய மேகங்கள், மேகப்படைகள், பாரிசவாய்வு, கைகால்பிடிப்பு, திமிர்வாய்வு, பவுத்திரம், கண்டமாலை, கன்னப் புத்து, லிங்கப் புத்து, யோனிப்புத்து முதலான ரோகங்களை கடவுள் கிருபையால் தகுந்த ஔஷதங்களைக்கொண்டு நிவர்த்தி செய்யப்படும்.

மைசூர் கவர்ன்மெண்டாராலும், நியூயார்க், லண்டன், டோக்கியோ, பர்லின், பாரிஸ், அகமதாபாத் முதலிய தேசங்களின் இண்டர்நேஷனல் சொசைட்டியாராலும், இங்கிலீஷ் டாக்டர்களாலும் பரிசிலனை செய்து மெடலும் நற்சாக்ஷிப் பத்திரங்களும் பெற்றது.

கிருஷ்ண டெண்டல் பாம்.

இவ்வற்புத ஆயுள்வேத பற்போடி சகல பல்வியாதிகளையும் போக்கி பற்களை உறுதியாக்கக் கூடியது. பாட்டில் 1க்கு விலை அணா 4. எல்லா ஷாப்பிலும் கிடைக்கும்.

M. R. ராஜகோபாலபிள்ளை,
சந்தான கிருஷ்ண ஆயுள்வேத ஔஷதாலயம், மன்னார்குடி.



# பண்டைத் தமிழரின் மேம்பாடு.

(ஸ்ரீமான், ஊ சா. வேங்கடராம ஐயர் எழுதியது.)

(160-ம் பக்கம் தொடர்ச்சி.)

தவிர, அக்காலம் பெரிதும் பண்டமாற்று முறையே நிகழ்ந்துவந்ததாதலின், இக்காலத்தில் உண்டாகும் நாணய மாற்றுத் தொல்லைகளும், கஷ்டங்களும் உண்டானதே இல்லை. வியாபாரிகளும், பொது ஜனங்களும் ஒன்றுபட்ட குடும்பத்தினர்போல வாழ்ந்துவந்தார்கள் என்று கூறப்படலாம்.

## மதக் கோட்பாடு.

இம்முறையிலே பல வழிகளாலும் மேம்பட்டுத் திகழ்ந்த தமிழ்ப் பெருமக்கள் தங்களைப் பொருட்பற்றுடையவர்களாகவே வைத்துக் கொள்ளவில்லை. அதனிலும் மேலாக மதப்பற்றைக் கைக்கொண்டிருந்தார்கள். தங்களைச் சில் வாழ்நாள் பல்பிணிச் சிற்றறிவினராகவே மதித்துவந்ததுடன் அனைத்துக்கும் ஆதாரமான கடவுள் ஒருவர் உண்டு என்ற கொள்கையும், அவர் அழிவற்ற ஞான உருவினர் என்பதும் அவர்களது கொள்கைகளாம். இக்காலம் பலதிறப்பட்டுக் கிடப்பதுபோன்ற வழிபாடுகள் அக்காலம் இருந்ததாக அறியக்கூடவில்லை. சூரியன், சந்திரன், கந்தழி என்ற மூன்றன்பொருட்டுப் பெரிதும் வணங்கி வழிபட்டுவந்தார்கள் என்பது அறியப்படுகிறது. அவையுள்ளும் கந்தழி என்பதுதான் அவர்களது முடிவான கொள்கை. கந்தழி பற்றற்றது. “யாதொரு பற்றும் இன்றித் தத்துவங் கடந்த தனிப்பொருள் கந்தழி எனப்படும்” என்பது ஆசிரியர் நச்சினார்க்கினியரது கருத்தாகும். இங்ஙனம் ஏனைய ஆசிரியர்களின் கோட்பாடும். இதனால் தமிழ்மக்கள் உலகினர் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத சாதனமாகிய மழைக்குத் துணை செய்வதாக அறியப்படும் சூரிய சந்திரர்களையும், அனைத்துக்கும் ஆதாரமான நாமரூபங்களற்ற பரம்பொருளையுமே வணங்கிவந்தார்கள் என்பது தேற்றமாகும். இனி இக்கந்தழிக்கு “முருகன்” என்ற பொருளுங் கொள்ளலாமாறு உரைகாணப்படுகிறது. பண்டை நூல்களால் பலதிறக் கடவுளின் பெயர்களும் காணப்படுகின்றன. என்ன காணப்பட்டாலும் அவை அனைத்தும் மனத்தை ஒருவழிப்படுத்த நிலைபிட்டுக்கொண்ட சாதனங்களாகவும், கந்தழியே பரம்பொருளாகவும், கொள்வதிலேயே அவர்களது உறுதியான நம்பிக்கை இருந்துவந்தது என்பது தவறாகாது. அன்றியும், அவர்கள் செல்வம், இளமை, யாக்கை ஆகியவற்றின் நிலையாமையைப் பெரிதும் அறிந்தவர்களாதலின் அவற்றை அதிகமாகப் பொருட்படுத்தாது அவற்றின் துணைக்கொண்டு கந்தழியாகிய ஆண்டவனது திருவருளைப் பெறவே முயன்றுவந்தார்கள் என்பதுபல சான்றுகளால் அறியப்படுகிறது. முற்றும் உலக இன்பத்தையே கூறப்புகுவதாகத் தோன்றியதாயினும் அந்த நூலுள்ளும் இம்மூன்றன் நிலையாமையும், ஆண்டவனது உண்மையும் வற்புறுத்தப்பட்டிருக்கும். புலன்களைப் பொறி வழிப்போகாது ஒருவழிப்படுத்தி உலகினர்க்கு ஊழியம் புரிந்து அன்புமயமாய் ஆண்டவனது திருவருளைப்பெற முயலுவதே மக்கட் பிறப்பு எடுத்ததன் மாண்பாகும் என்பது அவர்களது உறுதியான கொள்கை! “வையமும் தவமும் தூக்கின் தவத்துக் கையவியனைத்தும் ஆற்றாது” என்னும் தொடர்மொழி இதனை வற்புறுத்தும். இத்தகைய எண்ணில.

## போர் முறை.

இனி, அந்தத் தமிழர்கள் கைக்கொண்ட போர்முறை பெரிதும் முன் எச்சரிக்கையுடன் ஆராய்ந்து அமைத்துக்கொள்வதாகக் காணப்படும். முதலில் இரு அரசர்களிடையிலே போர் தொடங்குவதனால் அதற்கு முன்னறப் பல பரிசோதனைகள் நடைபெறும். சண்டைக்குச்செல்வோருக்கும், எதிர்ப்போருக்கும், அங்ஙனமே கோட்டைக்குள் இருப்போருக்கும், வெளியே முற்றுகை போட்டிருப்பவருக்கும் வெளிப்படையாக அறியக்கூடிய பூ அடையாளங்கள் உண்டு. வெற்றி, தோல்விகளைக்காட்டும் அடையாளங்களும் உண்டு. சமாதானம் செய்துகொள்வதற்கும், தூதர்க்கும் தனித்தனி அடையாளங்கள் இருந்தன. போர் தொடங்குமுன் இன்னார் இன்னார் அம்புக்கு எதிரிலே வரக்கூடாது என்ற நியதிகள் உண்டு. இன்னார் இன்னார் இருந்தால் அவர்களை எதிர்த்துச் சண்டை செய்தலாகாது என்பதும் உண்டு. போர் செய்து மார்பிலே புண்படு

வதைப்பெருமையாகவே கருதிவந்தார்கள். மார்பிலே தைத்த அம்பு முதுகின் வழியாக உருவிச் சென்றாலும் அக்காரணம்பற்றித் தோன்றிய முதுகுப் புண்ணுக்கு வெட்கப்பட்டுத் தமது உயிரை மாய்த்துக்கொள்ளும் தன் மதிப்பும் வீரமும் அவர்களிடம் குடிகொண்டிருந்தன. எதிரி விடும் அம்பு முதலியவற்றைக் கண்டு கண்ணிமையைச் களித்தாலும் அது தோல்வியாகவும், இழிவாகவும் கருதப்பட்டது. முன் அறிவிப்பு இன்றி எவரும் போர் தொடுப்பதில்லை. போரிலே தோற்றுப்போன அரசர்களும், நாடும் பலவகையில் அவமதிக்கப்படுவதும் உண்டு. எதிரிகள் வணங்கிவிடுவார்களானால் அவர்களை முற்றும் மன்னித்து அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச்செய்து கொடுப்பதும் உண்டு. பகைவர்களை வென்று குடிகளுக்கு நன்மையைச் செய்யாத நிலைமையைப் பெரியதொரு பாபமாகவே அக்காலத்தரசர்கள் கருதி வந்தார்கள். போரிலே வெற்றிபெற்ற அரசர்கள் தம்முடைய படைத்தலைவர்களுக்கு மானியங்களையும் பட்டங்களையும் வழங்கி வருவது வழக்கமாயிருந்தது. சண்டை நடக்கும் காலங்களிலே நால்வகைத் தந்திரங்களும் கைக்கொள்ளப்படும். தலைவனது மகிழ்ச்சிக்காகச் சண்டையிலே உயிரிழப்பதைப் பெறுதற்கு அரிய பெரும் பேறாகவே கருதி வந்தார்கள். அங்ஙனம் போரிலே இறந்தவர்களது உருவம் கற்களிலே அமைக்கப்படுவதுடன், அவர்களுடைய வீரச் செயல்களும் அக்கற்களிலே வரையப்பட்டிருக்கும். உலகம் பொது என்ற சொல்லைப் பொறுக்காத காரணத்தினாலோ, நட்பரசர்களுக்கு உதவி செய்ய வேண்டியகாரணத்தினாலோ தான்பெரும்பாலும் போர் நிகழும். போர் நடக்கும் காலத்திலே காயம்பட்டவர்களுக்கும், உறுப்பிழந்து துன்புறுகின்றவர்களுக்கும் எல்லாவிதமான உதவிகளும் கட்சிபேதம் பாராட்டாமல் செய்யப்படுவதும் அக்காலத் தமிழர்களின் வழக்கமாயிருந்தது. இவ்வளவு துறைகளிலே பழகியிருந்தும் தமிழர்களது பெருநோக்கம் அமைதியான சமாதான வாழ்க்கையிலேயே என்பது தவறாகாது.

### வீரம்.

இவ்வாறு பழகிய தமிழர்கள் வீரத்தன்மையிலே மிகவும் மேம்பட்டிருந்தனர். உயிர்போவதாயினும் முன்வைத்தகாலைப் பின் வைக்கமாட்டார்கள். பகையரசர் கைப்பட்டு உயிர் வாழ்வதினும் இறப்பதே மேலானது என்பது அவர்களது கருத்து. அக்காலத்தினரது வீரத்திற்கு எடுத்துக் காட்டாய்ப் பல வரலாறுகளைக் கூறலாம். அந்த வரலாறுகளுள்ளும் பெண் பாலர்களால் செய்யப்பட்டனவாக அறியப்படும் வரலாறுகள் மிகப் போற்றத்தக்கன. ஒரு பெண்மணி முதல் நாள் போரிலே தனது கணவன் இறந்துபோய் விட்டான் என்பதை அறிந்து வருந்திக்கொண்டிருக்கின்றாள். அந்நிலையில் மறுநாள் விடியற்காலத்திலே தனது கோட்டையை முற்றுகைபோட்டிருக்கும் பகையரசனது யுத்தமுரசம் போருக்கு அழைக்கும் குறிப்புடன் ஒலிக்கின்றதைக் கேட்கின்றாள். கேட்டதும் என்ன செய்தாள்? வாளாயிருந்தனளா? அஞ்சி நடுங்கினளா? இல்லை; இல்லை. தனக்கு ஒருமகன்தான் இருக்கின்றான் என்பதையும் கவனித்தாளில்லை. அந்த ஒரு மகனும் மிகச் சிறு வயதினையுடைய பாலகன் என்பதையும் பொருட்படுத்தினாளில்லை. அந்த ஒரே மகனை அழைத்தாள். போரிலே வெற்றிபெறுவதால் வரும் நன்மைகளையும், இறப்பதால் வரும்புகழினையும் விளக்கி உரைத்தாள். முதல்நாள் தந்தையைக்கொன்ற பகையரசனைக்கொன்று தந்தைக்குச்செலுத்தவேண்டிய கடமையைச் செலுத்திவரத் தூண்டினாள். தலைமயிரை எண்ணெயிட்டுச்சீப்புக்கொண்டு வாரிப் பரம்பரையாக வந்த வாளை உருவிக் கையிலே கொடுத்துப் போர்க்களத்தைச் சுட்டிக்காட்டி வெற்றியுடன் திரும்பிவா என்று அனுப்பினாள். இவ்வளவேயோ? பிறிதொரு பெண்மணி தனது மகன் போர்க்களத்திலே நின்று போரியற்றும் ஆற்றல் இன்றிப் புறமுதுகிட்டு ஓடிவிட்டான் என்று கேள்வைப்பட்டாள். அங்ஙனமாயின் 'அவனுக்குப்பால் கொடுத்து வளர்த்த எனது முலையை அறுத்துக்கொள்வேன்; அவன் இருந்த வயிற்றைக் கீறிக்கொள்வேன்' என்று வஞ்சினத்தைக் கூறிக்கொண்டாள். தனது தள்ளாத நிலைமையையும் கவனித்தாளில்லை. கொக்குப்போலும் நரைத்த கூந்தலினையுடைய அத்தொண்டு கிழவி கையிலே வாளை எடுத்துக்கொண்டு போர்க்களத்திலேபுகுந்தாள். அங்கே இறந்துகிடக்கும் காளைப் பருவத்தினரைப் புரட்டிப்புரட்டிப் பார்த்தாள். அவர்களுக்கு இடையில் தனது மகன் வெட்டுண்டு இறந்து கிடப்பதைக் கண்டாள். தனது மகனது வீரத்திற்கு மெச்சினாள். அவனைப் பெற்ற காலத்தில் அடைந்த மகிழ்ச்சியைக் காட்டிலும் அதிகமான மகிழ்ச்சியை எய்தினாள். இஃதன்றோ வீரம்? இத்தகைய வீரச் செயல்கள் பல நிகழ்ந்திருக்கின்றன என்பது தமிழ்நூல்களால் அறியப்படும்.

[தொடரும்]



# கிராம விவசாயச் சங்கங்கள்.

## சில முக்கிய குறிப்புகள்.

(ஸ்ரீமான், எஸ். பிரணதார்த்திஹரன் எழுதுவது).

2234 73

(164-வது பக்கம் தொடர்ச்சி.)

இவ்விரண்டில் முதலாவது எங்கும் எக்காலத்திலும் சாத்தியமானதல்ல. ஆனால், இரண்டாவது முறை சாத்தியமாகலாம்.) அங்குள்ள சில பெரியோர்கள் சேர்ந்துயோசித்து கிராமங்களிலும் அவைகளுக்கு மேல் ஜில்லாக்களிலும் சில விவசாய சங்கங்களை ஏற்படுத்தினார்கள். ஒன்றிரண்டு வருஷங்களுக்குள் அந் நாடெங்கும் பரவிவிட்டது. இவைகள் கிருஷிச் செலவிற்கும், அதற்கு சம்பந்தமான செலவிற்குமே கடன் கொடுத்தன. கூடிய சீக்கிரம் தரிசு நிலமில்லாமல்போய் விட்டது. குடியானவர்களுக்கு விவசாய விருத்தி செய்யும் முறைகளைப் போதிக்கவும், தானியங்கள் மற்றுமுள்ள பயிர்களைப்பொறுக்கி விருத்தி செய்யவும் விவசாய நிபுணர்கள் சங்கத்தின் ஆதரவில் நியமிக்கப்பட்டார்கள். எரு, விதை, கருவிகள் முதலியன வாங்க கடன்வாங்குபவனுக்கு பணத்தைக் கொடுப்பதில்லை. ஆனால் இச்சங்கங்களால் நியமிக்கப்பட்ட விவசாய இன்ஸ்பெக்டர்கள் எவையெவை எவ்வளவு வேண்டுமென்று சங்கங்களுக்குச் சிபார்சு செய்தார்களோ அவைகளைக் கொடுத்துக் கிரயத்தைக் கடனுக்கு வைத்துக்கொள்ளும். கடனுக்கு வட்டி வெகு சலபம். ஒருகிராம சங்கத்திலிருந்து அடுத்த கிராமத்திலிருப்பவருக்கு எவ்விதத்திலும் கடன்கொடுப்பதில்லை இது கிராமத்துக்கு கிராமம் சங்கம் ஏற்படுத்த தூண்டுதல் போலிருந்தது. சங்கங்களின் ஆதரவில் கிராமப்பள்ளிகள் தோறும் விவசாயக்கல்வி போதிக்கப்பட்டது. எல்லாச் சங்கங்களின் தலைமைபாங்கியின ஆதரவில் வேணடிய நிபுணர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்கள் அப்பொழுதப்பொழுது கண்டுபிடிக்கும் நூதன கிருஷிமுறைகளும், அந்நியதேசங்களில் உள்நாட்டிலும் சரக்குகள் விற்கும் நடப்பு விலைவிவரங்களும பள்ளிப்பிள்ளைகளுக்கும் கிராம ஜனங்களுக்கும் தெரியும்படி துண்டுப்பத்திரிகைகள் விடுத்து அறிவித்தார்கள். விளைபொருள்களை விலை அதிகமாயிருக்கும்பொழுது விற்றும் கொடுக்கும் கடன் கொடுப்பதால வரும் வட்டியும வேறு கைங்காயங்களுக்கு வசூலிக்கப்படும் சிறு கமிஷனும் சேர்ந்து வெகு சீக்கிரத்தில் லக்ஷக்கணக்கான தொகைக்கு மேல்பாங்கில் மிகுந்தது. இதைக்கொண்டு எருக்கள், கருவிகள் செய்வதற்கும் இதர கைத்தொழில்களை விருத்தி செய்வதற்கும் அநேக தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டன. இவைகள் எவ்வித வேலைக்கும் சர்க்கார் உதவியாவது, சம்பந்தமாவது வைத்துக்கொள்வதில்லை. (சர்க்கார் சம்பந்தப்பட்ட வேலைகள் முன்னேற்றம் சீக்கிரமடைகிறதில்லையென்று நாம் அநேக வழிகளில் காண்கிறோம்) சுமார் 10 வருஷகாலத்திற்குள் இந்நாடு அந்நிய தேசங்களுடன் போட்டிபோட தலைப்பட்டுவிட்டது.

இதாலிய தேசம் இருந்த நிலைமையென்ன! இப்பொழுதுள்ள நிலைமையென்ன! விவசாய சங்கங்களே காரணம். அயர்லாந்து, டென்மார்க்கு முதலிய தேசங்களும் இவ்வழியிலேயே முன்னேற்றமடைந்தன. இவையெல்லாம் முந்திக்கொண்ட பிறகே இங்கிலாந்து விழித்துக்கொண்டது. இருந்தபோதிலும் கூடிய சீக்கிரத்தில் விருத்தியடைந்ததற்குக்காரணம்விவசாயசங்கங்களாகும் மேலும் இங்குள்ளோர் யாவரும் எதைப் பார்த்தாலும், கேட்டாலும், படித்தாலும் எப்படிப்பட்ட அற்ப விஷயமாயிருந்தபோதிலும் அதை விடாமல் தீர விசாரித்தும் பரீக்ஷை செய்தும பார்த்து நன்மை தீமைகளைக்கண்டு கொண்டு நன்மையாயின் கைவிடமாட்டார்கள். இத்தகையகுணங்களை நாம் விருத்திசெய்ய முயலவேண்டும். இதற்கு படிப்பு வேண்டும்.

தேச ஊழியத்திற்கும், காங்கிரஸ்மகாசபைக்கும் ஏராளமான பணம் சேர்க்கப்படுகிறது. இதைப்போலவே "தேச புனருத்தாரண பண்டு" என்ற பெயரில் பணம் சேகரித்தும் தேச ஊழியத்திற்காக இப்பொழுதுள்ள பணத்தையும் (விவசாயம் முன்னேற்றமடையச் செய்வதும் தேச ஊழியத்திலொன்று) சேர்த்து சர்க்காருடன் யாதொரு சம்பந்தமுமில்லாத கிராமச் சங்கங்கள் ஸ்தாபிக்கலாம். "சிறு துளி பெருவெள்ளம்" என்பதுபோல் ஆரம்பத்தில் சிறிதாயிருந்தாலும் மேனாடுகளில் செய்த முறையில் சரிவர நடத்தினால் காட்டுத் தீபோல் எங்கும் பரவிவிடும். இம்முறையைக் கைப்பற்றினால் ஜனங்களுக்குள் ஜாதிபேதமில்லாத ஒற்றுமையும் அவர்களுக்கு தேச ஊழியர்களின்மேல் அதிக நம்பிக்கையும் அதனால் அவ்வூழியர்கள் எடுத்துக்கொண்ட நோக்கங்களும் அன்னிய நாட்டார்களின் தயவின்றி வெகு சீக்கிரம் கைகூடும்.

பயிரிடுவோர்கள் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள் பலவுள. அவையெல்லாவற்றிலும் நிபுணர்களாவது அசாத்தியமானது; அது வெகு சிலருக்கே முடிந்தது. ஆனால் அவைகளெல்லாவற்றிலும் சிறிதளவாவது தெரிந்துகொள்வது அவசியமாகும்.

முதலில் நிலவிஸ்தீரணமும், மேடு பள்ளங்கள் தெரிந்துகொள்ள "நிலஅளவிடை" தெரியவேண்டும். இதைக் கற்றுக்கொண்டால் செலவு வழக்கு சந்தேகமில்லாமல் அவரவர் நில விஸ்தீரணத்தை அளந்து தெரிந்துகொள்ளலாம். பயிரிட முக்கிய சாதனங்களாகும் உழவு கருவிகள், இயந்திரங்கள், தண்ணீரிறைக்கும் இயந்திரங்கள் முதலியவற்றின் பிரயோஜனங்களைத் தெரிந்துகொள்ளவும், உபயோகப்படுத்தவும், 'இயந்திர சாஸ்திரமும்' பாசன கால்வாய்கள், வடிகால் வசதிகள் ஏற்படுத்தவும் பயிர்களுக்கு வேண்டிய நீரளவையும் தெரிந்துகொள்வது அவசியம்.

மண் உண்டான வழிகள், அதன் உருப்பிலக்கணம், அதிலடங்கியிருக்கும் பதார்த்தங்கள் இவைகளைத் தெரிந்துகொள்ளவும், கால மழைகள், காற்று முதலியவைகளை ஏமாற்றமடையாமல் பயிரிடத் தெரிந்துகொள்ளவும் முறையே 'பூகோள உருப்பிலக்கணமும்' காலக்குறியறி சாஸ்திரமும் தெரியவேண்டும். பயிர்களின் வேற்றுமையும் அவைகளின் அங்க விசேஷங்களையும் தெரிந்துகொள்ள 'தாவர சாஸ்திரமும்' பயிர்களுக்கு வேண்டிய ஆகாரங்கள், பலஎருக்களின் தன்மை நிலைமை, உயர்வு தாழ்வு முதலியவற்றை அறிந்துகொள்ள 'ரசாயன சாஸ்திர'முமே சிறிது அவசியம். பூச்சிகளாலும், வியாதிகளாலும் பயிர்கள் வெகு நஷ்டமாகின்றன. இவைகளைத் தடுக்கும் முறைகளைத் தெரிந்துகொள்வதும் முக்கியமாகிறது.

வேலைசெய்யும் எருதுகள், பசுக்கள், ஆடு கோழிகள், தேனீக்கள், பட்டுப்பூச்சி முதலியவற்றைப் போஷித்து விருத்தி செய்யும் முறைகளையும், அவைகளினின்று நமக்குக்கிடைக்கும் பிரதிப்பிரயோஜனங்களையும், அவைகளுக்கு நோய்கள் வராமல் தடுக்கவும் வந்த நோய்களைப் போக்கும் சாதாரண கடை மருந்துகளையும் கூடிய வரையில் கற்றுக்கொள்ளவேண்டும்.

"உழவன் கணக்குப்பார்த்தால் உழக்கும் மிச்சமில்லை" யென்று சொல்வது பரம்பரை பாத்தியமே ஒழிய சரியான கணக்கு வைத்துப் பார்த்தவர் யாருமில்லை என்றே சொல்லலாம். ஒவ்வொரு வயலிலும் என்னென்ன வேலை செய்யப்படுகிறதென்றும், எதெதற்கு எவ்வளவு செலவாகிறதென்றும், மகசூலின் விற்றுமுதல், இருப்பு, அதன் மதிப்பு, கருவிகளின் தேய்வழிவு முதலியவற்றின் கணக்குகளை ஒவ்வொரு வருஷமும் எழுதிவந்தால் பயிரிடுவோரின் நிலைமை மென்மேலும் விருத்தியடைவதும் கீழ்நோக்குவதும், கீழ்நோக்கின் அதற்குப் பரிகாரமும் தெரிந்துகொள்ள முடியும். இதற்கு வரவு செலவு எழுதும் கணக்குகள் தெரிய கணித நூல் அத்யாவசியம்.

இப்பொழுதிருக்கும் நிலைமையில் குடியானவர்கள் தாங்கள் விளைவிக்கும் பொருள்கள் காலநிலைமைக்கு வேண்டியதுதானாவென்றும், அவைகள் எங்கெங்குசெல்கிறதென்றும், அவைகளுக்கு அப்போதைக்கப்போது மாறுபடும் விலைவிவரமும் தெரிந்துகொள்ள சக்தியற்றவர்களாயிருக்கிறார்கள். கடுக்கொள்ளை யடிக்கும் தரகுக்காரர்களிடமும், கடன் கொடுக்கும் சாவுகார்களிடமும் குறைந்த விலைக்கு (சிலசமயம் பயிராயிருக்கும் பொழுதுகூட) விற்றுவிட்டு, மறுபோகம் பயிரிடக்கூட பணமில்லாமல் கடன் வாங்குவதைக் காண்கிறோம். இக்குறைகளையெல்லாம் தீர்த்துவைக்க வல்லதும், விவசாயத்தை விருத்தியடையச் செய்யக்கூடியதும் விவசாயச் சங்கங்களேயாகும். இவைகள் மேனாட்டு முறையில் நடத்தவேண்டும். இச்சங்கங்களின் ஆதரவில் வேண்டிய நிபுணர்களிருப்பார்களாதலால், இப்பொழுது நடந்துவரும் வெவ்வேறு இலாகாவின் வேலைகளும் ஒன்றுசேர்வதற்கும் எங்கும் போதனாசாலைகள் ஏற்படுவதற்கும் அதனால் நாடு செழிக்கவும் காரணமாகும். [சு. மீ]

# பொங்கற் புதுநாள்.

பாரதமக்களாகிய நாமெல்லோரும் பண்டைக் காலந்தொட்டுக் கொண்டாடிவரும் பண்டிகைகளில் பொங்கற் புதுநாள் என்பதும் ஒன்றாம்!

இப்பண்டிகையானது வேறு சில பண்டிகைகள்போலத் திதிகளைப்பற்றியேனும் நட்சத்திரங்களைப்பற்றியேனும் கொண்டாடப்படாமல் ஆண்டுதோறும் தைத்திங்கள் முதல்நாள் நம் முன்னோர்களால் கொண்டாடப்பட்டுவருகிறது.

இப்பண்டிகை தமிழ்நாட்டில் முன்பு கொண்டலூர்தியாகிய இந்திரனைக்குறித்தும், அதன்பின் கண்ணனாக அவதரித்த கருங்கடல்வண்ணனைக் குறித்தும் கொண்டாடப்பட்டு இப்போது செஞ்ஞாயிற்றுக் கடவுளைக் குறித்துக் கொண்டாடப்பட்டு வருகிறதெனப் பெரியோர் கூறுவர். எழிலிவாகனாகிய இந்திரன் மருதநிலத்துக்குத் தெய்வமாகலானும், எழிலிகளெழும் இவன் ஆணையினியங்கவேண்டுவன வாகலானும், மருதநிலமக்கள் தாம் வளம்பெற வேண்டி பகவானைப் பூசித்தல் மரபாகலானும், பண்டைத்தமிழ் மக்களனைவரும் தத்தம் வீடுகளையும் மறுகுகளையும் ஊர்களையும் செவ்வே அலங்கரித்து அந்தந்த வருடங்களிலும் ஆங்காங்கு விளையும் பொருள்களைக்கொண்டு பூசித்து வந்தனரென்பது சாலப் பொருத்தமானதே! இளவேனிற்காலத்தில் இந்திரனுக்கு இருபத்தெட்டுநாட்கள் விழாவெடுத்து வந்தனரென்றசெய்தியொன்று பண்டைத்தமிழ்நூல்களால் அறியப்படுகின்றது. அவ்விழாச் சிறப்புகளை மணிமேகலை, சிலப்பதிகாரம்முதலிய நூல்களில் விரிவாகக்காணலாம். அதுவன்றி மார்கழித்திங்கள் இறுதிநாளில் போகிபண்டிகையென வழக்கிலிருந்து வருவதாலும், போகியென்னும் சொல்லுக்கு இந்திரனெனப் பெயருண்மையானும், வீடுமுதலிய இடங்கட்குப் புதுமண்ணிட்டு மெழுகிடுவதானும், பிறசில காரணங்களாலும் இம்மார்கழித்திங்களிறுதியில் இந்திரனுக்கு ஏதேனும் விழாவெடுத்துச் சிறப்புச் செய்தார்களோவெனக் கருதவேண்டியிருக்கிறது. அவ்வாறு கருதின் தைத்திங்கள் முதல்நாளுடன் அவ்விழா முற்றியிருக்கவேண்டும் அல்லது போகிப்பண்டிகையன்று இந்திரனுக்கு விழாவெடுத்துத் தைத்திங்கள் முதல் நாளுடன் முற்றுப் பெற்றிருக்கவேண்டுமெனவும் எண்ணலாம். இவ்வாறு இந்திரனுக்குச் செய்த சிறப்புக்களைக் கண்ணன் ஒரு திருவிளையாட்டாக இந்திரன் செருக்கை மாற்றி அதுவரையில் இந்திரனைக் குறித்துச் செய்துவந்த சிறப்புக்களைத் தனக்கேசெய்யுமாறு பணித்தமையின் அவ்வழக்கம் மாறிப் பின் கண்ணபிரானுக்கே யுரித்தாயிற்று.



இனி, இப்போது ஆதித்தனைக்குறித்து, இதனைக் கொண்டாடுவதற்குக் காரணமென்னையோவெனிற் கூறுதும். என்றூழ் இறைவனது எட்டுத் திருவுருவங்களில் ஒன்றாகலானும், இம்மண்டலத்துச் சதாசிவமூர்த்தி யெழுந்தருளியிருந்து ஆன்மாக்களுக்கு அருள் செய்கிறாரென்பது நூற்றுணிபாகலானும், கொண்டல்கள் காலத்திற் பொய்யாது பெய்து வளம் பெருக்குதற்கும், பயிர் பச்சைகளும், மற்றைச்சீவப்பிராணிகளும் உயிர் வாழ்வதற்கும், இவ்வாதித்தன் இன்றியமையாததாகலானும் செங்கதிர்க் கடவுளுக்கு இச்சிறப்புச் செய்தல் மிகச் சிறந்ததே!

நிற்க, இனித் தைத்திங்கள் இரண்டாம் நாள் பசுக்களைப் பூசித்தலைக்குறித்துச் சிறிது ஆராய்வாம். முப்பத்து முக்கோடி தேவர்களும் பசுக்களின் முழுமெய்யினும் வசிக்கின்றார்களென்பது ஆகமநூற்றுணிபாகலானும், பிறிதோருயிர்க்கும் ஊறுசெய்யாப் பிராணியாகலானும், சிவபிரானுக்குரிய அபிஷேகப் பொருள்களில் ஐந்து ஆனிடத்தினின்று கொள்ளப்படுதலானும், இப்பெருஞ் சிறப்புக்களைக் கருதிப் பசுக்களை நன்றாகக்குளிப்பாட்டி மஞ்சள் முதலியன பூசிப் பொங்கலிட்டுப் படைத்து அலங்காரஞ்செய்வித்து ஊர்வலமாகக் கொண்டுவருதலும் இத்தமிழ்நாட்டு வழக்கமாகவிருந்துவருகிறது.

இனி மூன்றாம்நாள் கன்னிப் பொங்கலென வழங்குவதைக்குறித்துச் சிறிதாராய்வாம். இது பார்வதிதேவியாரைக் குறித்துக் கன்னிப்பருவத்தையுடைய பெண்கள் தமக்குத்தக்க கணவன் வேண்டுமெனவும், தத்தம் ஆக்கங் கருதியும் பற்பலவிதமான சித்திரான்னங்களும் பல பழவகைகளும் பிறவுங்கொண்டு பூசித்தலேயாம். இது கன்னிப் பொங்கலெனவும் வழங்கப்படும். ஈண்டுக் கன்னியென்பது பார்வதி தேவியாரைக் குறித்து நின்றது.

தமிழ் மாணவன்,
சிதம்பரம்.

பாலச்சந்திர பற்பொடியை உபயோகியுங்கள்!
சகலவித தந்தரோகங்களையும் நிவர்த்திக்கும் !!
பற்களை உறுதிப்படுத்தும் !!!

## கிராமங்களில் வாலிபர்கள்.

கிராமங்கள் இந்திய தேசத்திற்கு ரத்தக்குழாய்கள். கிராம சீர்திருத்தத்தைப்பற்றிப் பேசாத தலைவர்களில்லை. அதன் அவசியத்தை உணராதவர் ஒருவருமிருக்கமாட்டார். ஆனால் ஒரு கிராமத்திற்குச் சென்று பார்த்தால் குறைகளுக்கு அளவில்லை. அவைகளில் சிலவற்றைக் குறிப்பிடுவோம்:—

ஜனங்களிடம் அவநம்பிக்கையும், சச்சரவும்

சுகாதார விஷயத்தில் அசிரத்தை

கிராம பரிபாலன வேலையில் ஈடுபடாதது

வட்டிக்காரர்களின் கொடுமை

வேலையில்லாக் காலத்தை வீணாக்குதல்

குடிகெடுக்கும் கள்

தேசிய விஷயங்களைப்பற்றி அறிவின்மை.

மன்னார்குடி தாலூகா பாலையூர் ஆச்ரமத்தை முக்கியஸ்தலமாகக் கொண்டு நாங்கள் ஒரு வாலிபக் கூட்டத்தார் சென்ற 22 மாதங்களில் எடுத்துக்கொண்ட பிரயாசையும், அதனால் ஏற்பட்டிருக்கும் அனுகூலங்களையும் கீழே குறிப்பிடுகிறோம்

பாலையூரிலும், அதன் சுற்று கிராமங்களிலும்

சகோதரத்துவம் ஒற்றுமையும் ஏற்பட்டிருக்கிறது

சுகாதார நிலைமை சீர்திருத்தம்

பஞ்சாயத்து சபைகள் ஸ்தாபிதம்

ஐக்கிய நாணய சங்கங்கள் ஸ்தாபிதம்

கதர் இராட்டினங்கள் பலவிடங்களில் வேலை செய்கின்றன

எங்கள் நேரில் ரூ 1000க்கு கதர் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது

ரூபாய் 4526—12—0 க்கு வீடு வீடாகச் சென்று விற்கப்பட்டிருக்கிறது

கட்குடி சுமார் 1000 பேர்களால் நிறுத்தப்பட்டிருக்கின்றன

பொது வாசகசாலை, புஸ்தகசாலை ஸ்தாபிதமாயிருக்கின்றன மதசம்பந்தமான கூட்டங்கள் 51 கிராமங்களில் உபந்நியாசங்கள்மூலம் பிரசாரம் செய்யப்பட்டிருக்கின்றன.

கிராமங்களில் எவ்வளவு வேலை செய்யக்கூடுமென்பதற்கு அறிகுறியாக இவைகளை கூறினோம். வேலை செய்வதற்கிடமிருக்கிறது. ஏற்படும் பலனும் அளவற்றது. வேண்டுவது வாலிபத் தொண்டர்களும், பணமுமே. எங்களுடன் சேர்ந்து உழைக்க முன்வரக்கூடிய தொண்டர்களை கூப்பிடுகிறோம்.

கிராமப் புனருத்தாரண இயக்கத்தில் நம்பிக்கையுள்ளவர்களிடமிருந்து தங்கள் ஆதரவின் அறிகுறியாக தங்களாலியன்ற பணவுதவியை நாடுகிறோம்.

பஞ்சமர்களுக்கு கிணறும், வைத்தியசாலைகளும் ஏற்படுத்துவது இவ்வருஷத்தில் நாங்கள் எடுத்துக்கொண்ட வேலைகளில் சிலபாகமாகும்

தலைவர்களுக்கு முக்கியமாக மகாத்மா காந்தியடிகளுக்கும், சேத்ஜம்னலால் பஜாஜ் அவர்களுக்கும் நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். மகாத்மா காந்தியின் கடிதங்கள் எங்களுடைய உற்சாகத்திற்கும், பலத்துக்கும் காரணங்களாக இருக்கின்றன. அடிகளின் முக்கிய கடிதம் ஒன்றை ஈண்டு குறிப்பிடுகிறோம்.

அன்புள்ள ராஜகோபாலன்,

உங்களுடைய வேலையைப்பற்றி விவரித்துள்ள கடிதம் எனக்கு சந்தோஷத்தை அளித்தது. இதுவரையில் உங்களிடமிருந்து கடிதம் கிடைக்காததைப்பற்றி ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்தேன்.

இவ்வருஷத்தில் நீங்கள் செய்த வேலை மிகவும் மேன்மையானது அடிக்கடி எனக்கு நீங்கள் ரிபோர்ட்டுகள் அனுப்பிக்கொண்டுவரவேண்டும்.

ஆச்ரமப் சபர்மதி,<br>10—6—28. } எம். கே. காந்தி.

இவ் வருஷத்திய வேலை பொதுஜனங்கள் உவந்து அளிக்கும் "பொருள்" உதவியைப் பொருத்து நிற்கிறது.

பி. ராஜகோபால ஐயர்,<br>பாலையூர் ஆச்ரமம், மன்னார்குடி தாலுக்கா.



## ராணா பிரதாப சிம்மன்.

அல்லது

### "ராஜபுத்திர தேச பக்தி"

(ஸ்ரீமான், S. மஹாலிங்க சர்மா சிறைவாசத்தில் எழுதியது.)

(All Rights Reserved)

(170-வது பக்கம் தொடர்ச்சி)

ஐந்து வயது பாலனாக இருக்கும்பொழுதே மீவாரம் என் கத்தி சாமர்த்தியத்தை நன்கு அறிந்திருக்கிறது. அந்தகாலத்தில் என்கையில் ஏற்பட்ட இதோ! இத்தழும்பு, என் உடலுள்ளளவும் என்னைவிட்டு நீங்காது. என்னிடத்து நிறைந்துள்ள பராக்கிரமத்தை வெளிக்காட்டும் அடையாளமபோல் நிற்கின்றது. அதனை ஒவ்வொருமுறை காணும் தோறும் என்னைப்பற்றி தாழ்மையாக நினைக்கின்றவர்கள் தங்களைத்தாங்களே கண்டித்துக்கொள்ளவேண்டும்.

பிரதாப:- நீ அதிகம்பேசவேண்டாம் ரஜபுத்திரர்கள் விசேஷமாக பேச்சுக்காரர்களாக இருந்துவிடுவதில்லை உன்னிடத்தில் உண்மையில் சக்தியிருக்குமேல் அதைச் செய்கையில் வெளிப்படுத்துவாய். இதோ நாம் இருவரும் தனியாக ஒருவருக்கொருவர் நின்று கத்திச்சண்டை செய்வோம் நம்மில் யாவர் அதிசாமர்த்தியம வாய்ந்தவர் என்பது முடிவில் விளங்கும்

சக்தன்:- தாங்கள் கூறியதே வெகுசரி. எனக்கு இதைவிடப்பிரியமானது வேறில்லை. ராஜகுமாரர்களுக்குள் தத்தம் பராக்கிரமசாமர்த்தியங்களைக் குறித்து போட்டியேனும், விவாதமேனும் ஏற்பட்டிருக்கிறகாலத்திலெல்லாம தனிச்சண்டைகள் செய்யப்படுவது மிகப் பழைய வழக்கங்களுள் ஒன்று. என்சாமர்த்தியத்தை நன்குவெளிப்படுத்தும்படி சண்டைசெய்யநான் தயாராக இதோ கத்தியைஉருவிவிட்டேன் தாங்கள்தயார்தானா?

ராஜபுத்திரர்கள் சண்டைகாலத்தில் சிறிதும் விட்டுக்கொடுப்பதேயில்லை. மகன் தந்தையுடனும், அண்ணன், தம்பியுடனும் சண்டைசெய்யும்படி ஏற்பட்டகாலத்தும் அந்தசமயத்தில்தமக்குள்ள ரத்தசம்பந்தத்தையும்மறந்து தத்தம் சாமர்த்தியத்தை நிலை நாட்டுவதையே நோக்கமாக கொண்டு ஆயுதங்களை கூசாது வீசி நிற்பர். சுயகௌரவமும், வீரமும் பழிக்கப்படுகிறகாலத்தில் ராஜபுத்திரனுக்கு உற்றாரென்பதும் உறவின் முறையாரென்பதும கிடையாது. வீரம் நிலைநாட்டுதலே துணிபு. அவ்விதம் வீரம் நிலைநாட்டும்பொருட்டு உடன்பிறந்த சகோதரர் இருவர் வாளேந்தி ஒருவரையொருவர் எதிர்த்து நிற்கத்துணிந்தனர்.

பிரதாப:- கத்தி உறையிலிருந்து கழட்டப்பட்டுவிட்டது. சண்டையை முதலில் நீ ஆரம்பிக்கிறாயா? என்றான். உடனே சக்தன் அதற்கு இசைந்தவன்போல் தன்னுடையபளபளப்பான நீண்டகத்தியை வெகுவேகமாக வீசினான். அவனுடைய கத்தியை பிரதாபன் தன்னுடைய வாளால் தாக்கினான். படீரென்றதொரு சப்தம் கேட்டது பராக்கிரமசீலனாகிய பிரதாபனுடைய கையினால் தாக்கப்பட்ட வாளினால் அடிபட்டதும் சக்தனுடைய கத்தி இரண்டு துண்டாகத்தெரித்து கீழே விழுந்தது. ஆனால் சக்தன் அதனால் மனம் இழந்துவிடாமல், ஒடிந்த கத்தியை கீழே எறிந்து ஈட்டியை எடுத்தான். க்ஷத்திரியதர்மத்தை அனுசரித்து சமமான உபபலத்துடன் சண்டைசெய்யவேண்டி பிரதாபனும் தன்வாளை உறைக்குள் செலுத்தி, ஈட்டியை கையில் நீட்டிப்பிடித்தான். ஈட்டிகளுடன் கோரமாக சண்டை செய்யத்தடங்கினர் சகோதரர்கள். ஆயுதங்கள் ஒன்றோடொன்று தாக்கும்பொழுது நெருப்புப்பொறிகள் சிந்தின. சப்தம் மலைவாரத்தில் திருப்பி ஒலித்தது.

அதே காட்டில் மலைக்கு சமீபத்தில் அழகிய ஆசிரமம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. அச்சிறு குடிலில் முனிவர் ஒருவர் ஏகாங்கியாய் இருந்து அருந்தவம் இயற்றிவந்தனர். கண்ணைமூடி, மனதை நிறுத்தி, கையில் ஜபமாலை ஏந்தி, எம்பெருமானுடைய இணையடிகளை தியானித்துக்கொண்டிருந்த முனிபுங்கவருடைய செவிகளில் இடிமுழக்கம்போல் ஆயுதங்கள் வேகமாகத்தாக்கும் சப்தம் கேட்டது. உடனே, தமது நிலைதவறி கண் விழித்தனர். சப்தம் அதிகரித்தது. ஆயுதச் சண்டை சிறிது நாழிகையிலேயே பேராடப்படுவதாகவும் வீரர்கள்பலர் மாண்டுபோயிருக்கக்கூடுமென்றும் அவருக்குத் தோன்றியது. மனம் உடனே வருத்தம அடைந்தது. "மாந்தர் உயிர வெறியுடன் சண்டைசெய்து, தம்மை மாய்த்துக்கொள்வது கோரமன்றோ!" என்று நினைத்தார். சப்தம வந்த திசையை நோக்கி வேகமாக நடந்தார்.

சிறிது நேரத்திற்குள் சண்டை நடக்குமிடம் வந்து சேர்ந்துவிட்டார். அங்கு சண்டை செய்து நிற்பவர் யாவர்? மீவார நாட்டின் சிம்மாசனத்தை அலங்கரித்த ராஜகுலத்தின் சந்ததிகளான பிரதாபனும், சக்தனுமே. அந்தணர் மனம் உடனே துடித்தது. பிரதாபன் திரும்பிப்பார்த்தான். கண்டான் தன்குலகுருவாகிய பாமரனத்தனை, கை ஆயுதம் தாங்கி சண்டையில் முனைந்திருந்த

தால், தலையைத்தாழ்த்தி வணங்கினான். சத்தன் அதுவும் செய்யாது சண்டையிலேயே மூழ்கியிருந்தனன்.

முனிவர் உடனே அவர்கள் இருவருக்கும் நடுவே சென்று, தைரியமாய் நின்று, ஆ! ராஜகுமாரர்களே! உங்களிருவருக்கும் ஏற்பட்ட ஓர் சிறிய சண்டையின் காரணமாக மேவாரத்தின் உத்தமமான ராஜகுலம் மண்ணோடு மண்ணாய் அழிந்து போவதோ! பூபசிம்மன் போன்ற சேவர்களும், அமரசிம்மன் போன்ற தீரர்களும் சங்கனைப்போன்ற வீரசிகாமணிகளும் ஆண்மையுடன் வீற்றிருந்து அரசுசெய்த அழகிய சிம்மாசனம் உதயசிம்மனுக்குப் பிறகு ஆளில்லாது வெற்றாசனமாக இருப்பது சரியோ! ராஜபரம்பரையை முடித்துவிடுவதற்கு துணிந்தீர்களே! நிறுத்துங்கள்! சண்டையை நிறுத்துங்கள்! என்று கதறினார்.

தங்களைத் தாங்களே மறந்து ஆவேசத்துடன் சண்டை செய்யும் அக்குமாரர்களுடைய காதில் முனிவருடைய உருக்கமானவேண்டுகோள் ஏறவில்லை. சண்டை நடந்துகொண்டுதான் இருந்தது.

உயிர்க்கொலையை சிறிதும் சகிக்காத உள்ளத்தைப் பெற்ற அவ்வந்தணருக்கு இச்சண்டை அளவற்ற துயரை விளைத்தது. "அந்தணரென்போர் அறவோர், மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலால்" என்பது பொய்யா மொழியன்றோ!

தன்னுடைய வார்த்தைகள் அவர்களுடைய காதில் ஏறவில்லை என்பதைத்தெரிந்து கொண்டார் தர்மசீலரான அவ்வந்தணர் ராஜகுலம்! அதுவும் சித்தூரின் புகழ்பெற்ற ராஜகுலம் அழிவதா? என்று அவர் பதறினார். உடனே ஓர்விதமாக தீர்மானித்தார். அவருடைய கண்களில் நீர்பெருக ஆரம்பித்தது கண்களைசெறிது மூடி இறைவனை மனமார ஒரு நிமிஷம் கடைசிமுறை தியானித்தார். இடையிலிருந்த உருவினார் தன்னுடைய உடைவாளை அதனைக்கையில் தன்னுடைய மார்புக்கு நேராகபிடித்துக்கொண்டு ராஜகுமாரர்களை உற்று நோக்கி உரத்த குரலில் இப்பொழுதேனும் சண்டையை நிறுத்துவீர்களா? என்றார்.

உத்தரம் கிடைக்கவில்லை ஒருநிமிஷம் சென்றது. கையில் பிடித்த கத்தி அந்தணரின் மார்பிற்குள் பாய்ந்தது. உதிரம் பீரிட்டு ஒருநொடியில் அந்தணரின் உயிர் நீங்கி உடல் மண்மேல் சாய்ந்தது.

அருமையான ராஜகுலம் அழியாமல் காக்கவிரும்பி தன்னுருயிரை அரைக்கணத்தில் தத்தம்செய்த அந்தணர் திலகமாகிய பரமானந்தருடைய உஷ்ணமான ரத்தம் ராஜகுமாரர்களின் பாதங்களில் பாய்ந்தது உடனே இருவரும். அடங்காத துக்கமடைந்து, உள்ளம் வெதும்பி தத்தம் கையிலுள்ள ஆயுதங்களை ஏககாலத்தில் கீழே எறிந்தனர். இருவர் கண்களிலும் நீர் ஆராய்ப்பெருகியது.

அடக்கமுடியாத துக்கத்தினால் அந்தணரின் உடலின் மீது விழுந்து புரண்டு கோவெனக்கதறினர். புத்தவெறியும், ஆவேசமும் சொல்லொணாத துக்கத்தில் முடிந்தது. பிரதாபன் வாய்திறந்து அலறத்தொடங்கினான். ஆ! அந்தணர் திலகமே! அறவோருக்கருங்கலமே! குன்றாக் குணக்குன்றே! கோவாதமணியே! குருவே! போன்றுத போர்மரபின் உயிர்நாடி, நின் உயிரை ஓர் கணத்தில் நீத்த உத்தமனே! ஆ! சத்தகைய ராஜாபிமானம்! சீலமே உருவெடுத்துவந்தனைய பெருமாளரான தங்களுடைய பரிசுத்த ஆத்மாவுக்கு இருப்பிடமளித்து பிரகாசித்த தங்களுடைய திருமார்பு, கேவலம் ஓர் உலக வீரன்போல் இரும்புக்கத்தியால் பிளக்கப்படுவதாயிற்றே! தாங்கள் எந்த ராஜகுலத்தை அழியாமல் காக்கவேண்டி உயிர் நீத்துச்சென்றீர்களோ, அவ்வுயர் குலத்துக்கு என்றும் நீங்காத ஓர்பழியையுமன்றோ விட்டுவைத்துவிட்டுச் சென்றீர்! தங்களுடைய அகாலமரணத்துக்கு காரணமான என்னை தாமதேவதையும் மன்னிக்குமோ? ஆ! என்ன செய்வேன், ஸ்ரீரகுநாதனது தேவியாகிய சீதாபிராட்டியை கூற்றினும் கொடிய ராக்கதன் கவர்ந்து செல்லும்பொழுது, லோகமாதாவான அப்பெருமாட்டி கையிறந்து, "ராமா"! "ராமா"! வென்கதற அந்தக்குறலைக்கேட்டு உடனே ஓடிவந்து, தேவியின் துன்பநிலையறிந்து உடல்பதறி இலங்கேசனுடன் அரும்போர்புரிந்து, ரத்தத்தைப் பெருகவிட்டுக்கொண்டே இறந்துபோன பக்ஷிராஜனாகிய ஜடாயுவும் உமக்கு நிகராவரோ! அந்தண ரென்றால் எல்லோரும் அந்தணரோ! தியாகமென்றால் எல்லாம் தியாகமாமோ! என்று பலவாறு புலம்பி, கடைசியில் எல்லாம் இறைவனது இன்னருள் என்று தேறி அந்தணருடைய ஈமக்கடன்களை முறையே நடப்பித்து அரண்மனை சேர்ந்தனன். பரிசுத்ததியாக புருஷராகிய அவ்வந்தண சிரோமணியின் உத்தமமான ரத்தம் எந்த இடத்தில் சிந்தியதோ, அந்த இடத்தில் அதி அற்புதமான ஞாபகச்சின்னம் ஒன்றுகட்டப்பட்டு, அதில் வைரச்சிலை நாட்டி சுவர்ணத்தகட்டில். "பெருங் கன்மையால் ஆருயிர் நீத்து, அரசர் குலம் காத்த அந்தணர் பெருந்தகை உதிரம பெருகி, உடல் சாய்ந்த உயர்தலமிதுவே" என்று எழுதப்பட்டிருந்தது.

அந்தணர் உயிர் வழங்கிய சம்பவம் எங்கும்பரவியது. ஏராளமான ஜைபத்திர பிரயாணிகளும், மற்ற ஏட்டவர்களும் கூட்டங்கூட்டமாக அந்த திவ்ய புருஷன் உயிர் நீத்த இடத்திற்கு யாத்திரை செய்து அங்கிருந்த ரத்தங்கலந்த சிவந்த மண்ணை தலையில் தரித்து அத்தியாக சீலரைப் போற்றிச் செல்கின்றனர். நிற்க,

பிரதாபன் அரண்மனை சென்றதும் வலாளனை விடுத்து சகோதரனை அழைப்பித்தனன் சிறிது நேரத்திற்குள் வலாளன் திரும்பிவந்து இளையராணாகாட்டிலிருந்து இன்னம் திரும்பவில்லையென்று தாதி கூறியதாகச் சொன்னான்.

[தொடரும்]



# தஞ்சாவூர் ஜில்லா பிராம்மணர் மகாநாடு, கும்பகோணம்.

1928ஹு டிஸம்பர்மீ 16உ ஞாயிற்றுக்கிழமை கும்பகோணத்தில், சென்னை மகா-ா-ா-ஸ்ரீ, திவான் பகதூர், T. R. இராமச்சந்திர அய்யர் அவர்கள் அக்கிராஸனத்தின்கீழ் நடைபெற்ற "தஞ்சாவூர் ஜில்லா பிராம்மணர் மகாநாட்டில்" நிறைவேறிய தீர்மானங்கள்.

I. (1) எந்த சமாஜத்தாரும் தமது மதக்கொள்கைகள், புராதன ஆசாரங்கள் இவைகளினின்றும் பிரிக்கமுடியாதபடி சம்பந்தமுடையதென்று கருதும் எந்தவிஷயத்திலும், எந்தசட்டசபையும்—அதிலும், பலஜாதி மதஸ்தர்கள் அடங்கிய நமது சட்டசபைகள்—எவ்விதத்திலும் பிரவேசிக்க அதிகாரமில்லையென்று இந்த மகாசபை உறுதியாக அபிப்பிராயப்படுகிறது.

(2) இனி ஏற்படக்கூடிய எவ்வித அரசியல் அமைப்புத் திட்டத்திலும், இந்நாட்டிலுள்ள எந்த சமாஜத்தாருடைய மதக்கொள்கைகளையும், ஆசாரங்களையும் எவ்விதத்திலும் சட்டசபைகளும் கவர்ன்மெண்டாரும் பாதிக்கும்படியான காரியம் எதுவும் செய்யத் தகுதியற்றதென நியமம் ஏற்படுத்தவேண்டுமென்றும், இந்த இன்றியமையா உரிமையை உறுதிப்படுத்தவேண்டியதற்கான முயற்சிகள் எல்லாம் உடனே கைக்கொள்ளவேண்டும் என்றும் இந்த மகாசபையின் தீர்க்கமான அபிப்பிராயம்.

சென்னை அட்வொகேட் பிர்ம்மஸ்ரீ K. பாலஸுப்ரமணிய அய்யரவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, தஞ்சாவூர் அட்வொகேட் பிர்ம்மஸ்ரீ T. கோதண்டராமய்யங்கார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகோபித்து அங்கீகரிக்கப்பட்டது.

II. (1) ஹரவிலாஸ சாரதர், டாக்டர் முத்துலக்ஷ்மிரெட்டி இவர்கள் கொண்டுவந்திருக்கும் விவாக மசோதாக்களை இம்மகாசபையார் கண்டிக்கிறார்கள். அம்மசோதாக்கள் சட்டமாகும்பட்சத்தில், ப்ரௌடையாகுமுன் கன்னிகைகளுக்கு விவாஹம் பண்ணிவைக்கவேண்டுமென்ற சாஸ்த்ர விதி குலைந்து, விவாகஸம்ஸ்காரத்தின் ஸ்வரூபம் அழிந்துபோய், விவாகம் பண்ணிக்கொள்வதா இல்லையா என்பது அவரவர் இஷ்டத்தைப் பொறுத்ததாய் வ்யவஸ்தை கெட்டுப்போய்விடுமென்றும், இந்துக்களுள் விவாகம் என்பது ஒரு புருஷனும் ஸ்திரீயும் தம் இச்சைக்காகச் செய்துகொள்ளும் வெறும் ஒப்பந்தம்போல் கருதுவது தவறு என்றும், சாஸ்த்ரங்களை நிர்ணயிக்க லௌகீகர்களுக்கு எவ்வித யோக்யதையுமில்லையென்றும் வற்புறுத்துகிறார்கள். பால்ய விவாகத்தால் விளைந்ததாக சிலர்சொல்லும் கேடுகள் ஒன்றும் அதுகாரணமாக ஏற்பட்டவையல்லவென்றும், இப்போது ஜனங்கள் எங்குமே உலக முழுவதும் வேறுபலகாரணங்களால் துன்பப்படுவதைபொத்து இந்நாட்டிலும் அதேமாதிரி காரணங்களாலேயே ஈனஸ்திதி உண்டாயிருக்கிறதென்றும், தம் ஸமாஜக்கட்டுகள் குலைந்து கலகலக்கும்படி, அவிவேகத்தால் தம் நிலைமை நழுவி, பிறர் பழக்கவழக்கங்களைக் கைக்கொண்டதாலும், ஹிதமான சாஸ்த்ர விதிகளையும் ஆசாரங்களையும் மறந்து, ஆசை போனபடியெல்லாம் ஆகாரங்களையும், பானங்களையும் பண்ணும் மதியீனத்தாலுமே நமது ஜனங்களுக்கு க்ஷேமக்குறைவுகள் உண்டாகியிருக்கின்றனவென்றும், இம்மகா சபையார் கருதுகிறார்கள்.

(2) விவாகவிஷயத்தில் மேற்கண்டவிதம் சட்டப்பிரவேசம் ஸர்வதா உதவாதென்றும், அவசரக்காரர்களான அவிவேகிகளின் வார்த்தையை ஆதாரமாய்க்கொண்டு எதுவும் செய்துவிடலாகாதென்றும், பரம்பரைப் பழக்கத்தாலும், உள்ளுணர்ந்த உறுதியுடனும், தம் விவாக முறைகள் மனிதர் நீதியையும் கடவுள் ஆக்ஞையையும் தழுவி அமைந்தவைகள் என்று எண்ணி நடந்துவரும் மகாஜனங்களின் மனக்கருத்தை எளிதாய் தள்ளிவிடலாகாதென்றும், கவர்ன்மெண்டாருக்கும், மற்றவர்களுக்கும் இம்மகாசபையார் எச்சரிக்கை கூறுகிறார்கள்.

(3) சட்ட நிர்ப்பந்தம் என்பது எப்போதுமே பின் நிற்கும் அடிபலத்தைச்சார்ந்ததாகையாலும், தம் மதத்தை யண்டின ஸமாஜசம்பிரதாயமாய் நீண்டகாலமாய் யாவரும் ஒப்பி நடத்தி

வரும் விவாக முறையை மேற்கண்ட மசோதாக்கள் திடீரென தண்டனைக்குட்படுத்தும் குற்றமாக்கும் நோக்கமுடையதாயிருப்பதாலும், மகாஜனங்களின் மதாசாரங்கள்விஷயமாய் இதுவரையில் கவர்ன்மெண்டார் கெட்டியாய்க் கைக்கொண்டிருந்த நடுநிலைமையைத் தலைகீழாய்ப் புரட்டுவதாயிருப்பதாலும், அவைகள் ஆதரவுக்குத் தகுதியற்றவையென்றும் சட்டசபையின் அதிகார வரம்புக்கு வெளிப்பட்டதென்றும் உணர்ந்து, அம்மசோதாக்களை எல்லா சட்ட சபை மெம்பர்களும் நிராகரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறது.

*திருவாங்கூர் ஸமஸ்தானம், பென்ஷன், திவான் பேஷ்கார், பிரம்மஸ்ரீ N. சுப்ரமண்ய அய்யரால் பிரேரேபிக்கப்பட்டு, மன்னார்குடி பிரம்மஸ்ரீ சேஷாத்ரி சாஸ்திரிகளால் ஆமோதிக்கப்பட்டு, ஸ்ரீ அஹோபிலமடம் வித்வான் இஞ்சிமேடு ஸ்ரீ உ.வே. ரெங்கநாதாசாரியஸ்வாமிகளாலும், மன்னார்குடி பிரம்மஸ்ரீ மஹோபதேசகர் ராமஸ்வாமி சாஸ்திரிகளாலும், பிரம்மஸ்ரீ கிருஷ்ண பட்டாசாரியாராலும், பிரம்மஸ்ரீ அக்னிஹோத்ரம் தாததேசிக தாதாசாரிய ஸ்வாமிகளாலும் ஆதரிக்கப்பட்டு ஏகோபித்து நிறைவேறியது*

III. (1) இப்போது ஆலோசனையிலிருந்து வரும் "சம்மத வயது மசோதா" சம்பந்தமாக விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் கமிட்டியில், ஷை சட்டத்தில் மாறுதலேற்பட்டால் விசேஷமாய் பாதிக்கும்படியான நிலைமையிலுள்ளோர்களின் பிரதிநிதிகள் ஒருவருமே இல்லையென்றும், அக்கமிட்டி மெம்பர்களில் அநேகர் தாங்கள் நடத்தும் விசாரணை முடியும் முன்னமேயே தங்கள் ஸ்தானத்திற்குரிய நடுமனதைக் கூச்சமின்றி விட்டு, பொதுக்கூட்டங்களிலும், தம்சாரார் அளிக்கும் விருந்து கோஷ்டிகளிலும் பேசிவரும் பேச்சுகளிலிருந்து ஷை மசோதாவுக்கு ஆதரவு உண்டாக்குவதற்கே வெளிக்கிளம்பியிருப்பவர்கள்போல காணப்படுகிறார்களென்றும் இம்மகாசபை உறுதியான அபிப்பிராயத்தை வெளிப்படுத்துகிறது.

(2) ஷைகமிட்டிமுன் ஆஜரான சாட்சிகளிற்சிலரை ஷைகமிட்டிமெம்பர்களில் சிலர் விசாரித்தலோரணையைப்பார்த்தால், அவர்கள் நேர்நிலைமை தப்பியும், பார்ப்பவர்களுக்கு இவர்கள் பட்சபாதத்துடன் இருக்கிறார்கள் என்று மனதிற்படும்படியாயும் நடந்துகொண்டார்களென்றும், சாஸ்திரவரம்புகளுக்குட்பட்டு நடப்பவர்களின்சார்பாக விசாரிக்கப்பட்ட சாட்சியம் போதாதென்றும், ஷைகமிட்டியார் விசாரிப்பதற்கர்ஹமுள்ள அநேகர்களை கூப்பிடவில்லையென்றும், முக்கியமாய் பிராம்மண ஸ்திரீகளின் அபிப்பிராயத்தை அறியஎவ்வித எத்தனமும் பண்ணப்படவில்லையென்றும், இம்மகாஸபை அறிவிக்கிறார்கள்.

*மன்னார்குடி பென்ஷன் சப்-ஜட்ஜ் பிரம்மஸ்ரீ T. ஸ்ரீநிவாஸ அய்யங்காரால் பிரேரேபிக்கப்பட்டு திருவிடைமருதூர் பென்ஷன் தாசில்தார் இராமச்சந்திரய்யர் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகோபித்து நிறைவேறியது.*

IV. நமது ஸநாதன தர்மத்திலும் தர்ம சாஸ்த்ரங்களிலும் நம்பிக்கையுள்ள எல்லா பிராம்மணர்களும் உடனே எல்லாகிராமங்களிலும் நகரங்களிலும்உள்ள பிராம்மண ஸமுதாய அபிப்பிராயத்தை வெளிப்படுத்தும்பொருட்டு, அங்கங்கே சென்று ஸமஸ்த புருஷர்களிடத்திலும் ஸ்திரீகளிடத்திலும் கையெழுத்துக்கள் வாங்கி, அதிகாரிகளிடம் சேர்க்கும்பொருட்டு கும்பகோணம் ஸநாதன தர்மப் பிரசாரக சபை காரியதரிசியிடம் அனுப்பிவைக்கும்படி இம்மகா ஸபை கேட்டுக்கொள்ளுகிறது.

*அக்ராஸனர் பிரேரேபணையின்பேரில் ஏகோபித்து நிறைவேறிற்று.*

V. பிராம்மணப் பையன்கள் நிர்ப்பந்தமாய் ஒவ்வொருவரும் தவறாமல் ஸம்ஸ்கிருதபாஷையை அப்பயிக்கவேண்டியதற்கு எல்லாவிதத்திலும் ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்றும், அவர்கள் நித்தியகர்மாக்களுக்கு உபயுக்தமான வேதபாகங்களையாவது ஸம்பிரதாய பத்ததியில் அத்யயனம் செய்விக்கவேண்டுமென்றும், இம்மகாஸபை வற்புறுத்துகிறது.

2. தங்கள் ஜாதிக்குரிய பாரம்பரை தர்மத்தை அநுசரித்து, பிராம்மணர்கள் யாவரும் அடங்கியவாழ்வுள்ளவர்களாயும், ஆத்மகுண ஸம்பத்தியைத் தேடுபவர்களாயுமிருக்க வேண்டுமென்றும், விவாகம் முதலிய விசேஷங்களில் மிகுந்த செலவுகளை விலக்கவேண்டுமென்றும், இம்மகாஸபை கோருகிறது.

*ஸ்ரீமடம் ஆஸ்தான வித்வான் பிரம்மஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகளால் பிரேரேபிக்கப்பட்டு, சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ வைத்தியநாதசாஸ்திரிகளால் ஆமோதிக்கப்பட்டு, ச்ரௌதபூஷணம் பிரம்மஸ்ரீகிருஷ்ண தீக்ஷிதரால் ஆதரிக்கப்பட்டு, ஏகமனதுடன் நிறைவேறியது.*



VI. வேறு எந்த ஸமாஜத்தாருடைய நன்மையையும் எவ்விதத்திலும் பாதிக்கும் படியான உத்தேசங்கள் இம்மகாஸபைக்கில்லையென்றும், இதர ஸமாஜத்தாருக்குமேல் எவ்விதமான ஐஹிக லாபமும் அடையவேண்டுமென இம்மகாஸபை கருதவில்லையென்றும், தங்கள் மதக்கொள்கைகளுக்கும் ஆசாரங்களுக்கும் விரோதமில்லாமல் எல்லா பொதுஜன வ்யவஹாரங்களிலும் கலந்து, ஒத்துழைக்க ஸித்தமாயிருக்கிறார்களென்றும் இம்மகா ஸபையார் தெரிவிக்கிறார்கள்.

*திருக்களாவூர் மிராசுதார் பிரம்மஸ்ரீ T. L. ஸாம்பய்யர் B.A., B.L., அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, மாயவரம் பிரம்மஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி அய்யரால் ஆமோதிக்கப்பட்டு, ஏகோபித்து நிறைவேறியது.*

VII. மேற்கண்ட ஸம்மத வயது மசோதா, விவாக மசோதாக்களால் விளையக்கூடிய அனர்த்தங்களை செவ்வையாய் உணராமல், அவைகளுக்கு சார்பாக இருக்கும் எல்லாசட்ட சபை மெம்பர்களையும் இம்மகாஸபை கண்டிக்கிறதென்றும், இனி மகாஜனங்களின் மதஸம்பந்தமானதும், மதவுணர்ச்சியைப் புண்படுத்தக்கூடியதுமான எந்தக்காரியத்தையும் தாம்சட்டசபையில் செய்வதில்லையென்று உறுதிப் ப்ரதிக்ஞை யார் முன்னமேயே கொடுக்கிறார்களோ, அவர்கள் மாத்திரமே சட்ட சபைகளில் பிரவேசிக்கும்படி எல்லாபிராம்மணர்களும் தாமும் "வோட்" செய்தும், பிறர் வோட் செய்யும்படி செய்தும், எல்லாப்பிரயத்னங்களையும் மேற்கொள்ள வேண்டுமென்றும் இம்மகாஸபை வற்புறுத்துகிறது.

*பிரம்மஸ்ரீ U. P. கிருஷ்ணமாசாரியாரால் பிரேரேபிக்கப்பட்டு, உ.வே. பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாஸதாதாசாரியாரால் ஆமோதிக்கப்பட்டு, தஞ்சாவூர் அட்வோகேட் பிரம்மஸ்ரீ R. ராமசேஷய்யரால் ஆதரிக்கப் பட்டு ஏகோபித்து நிறைவேறியது.*

VIII. பிரத்தியேகமாய் அந்தந்தஸமாஜத்தார்களுக்கு உரித்தான விஷயங்களில் சட்டங்கள் மூலமாய் பிரவேசிப்பதும் நிர்ப்பந்திப்பதும் தகுதியற்றதென்று இந்து மகாஜனங்களின் பெரும்பான்மையோரின் கருத்தாயிருப்பினும், "நூதனமார்க்க" ப்பற்றுள்ளவர்களெனச்சொல்லிக்கொள்ளும்சிலர்களின் ஆளுகையில் அநேகபத்திரிகைகள்—அதிலும் முக்கியமாய் "ஹிந்து" தினசரி பத்திரிகை—நடந்துவருவதாலும், அப்பத்திரிகைகள் "சீர்திருத்த" க்கக்ஷிக்கு விரோதமான ஸமாசாரங்களையும் உபந்யாஸங்களையும் வெளிப்படுத்தாமல் ஒரே நோக்கத்துடன் தடை செய்துவருவதாலும், மகாஜனங்களின் உண்மைக்கருத்து தாராளமாய் வெளிப்படவில்லையென்று இம்மகாஸபை உறுதியாய் எண்ணுகிறது.

*மாயவரம் பிரம்மஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி அய்யரால் பிரேரேபிக்கப்பட்டு, செம்மங்குடி பிரம்மஸ்ரீ லாஞ்சிநாதய்யரால் ஆமோதிக்கப்பட்டு, கும்பகோணம் அட்வோகேட் பிரம்மஸ்ரீ N. திருவேங்கடத்தய்யரால் ஆட்சேபிக்கப்பட்டு, பிறகு ராவ்பகதூர் N. கிருஷ்ணசாமி அய்யங்காரால் ஆதரிக்கப்பட்டு, ஐந்துபேர் மாத்திரம் ஆட்சேபிக்க, மற்றெல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டு நிறைவேறியது.*

IX. பிரம்மஸ்ரீ T.R. இராமச்சந்திரய்யர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் "வேதசாஸ்த்ரோஜ்ஜீவினி" என்னும் ஸர்வவித்யாலய ஸ்தாபனகாரியத்தை இம்மகாஸபை பூர்ணமாய்ஆதரிப்பதுடன், அக் காரியம் ஸம்பூர்ணமாய் நிறைவேறுவதற்கான திரவிய ஸஹாயமும் மற்றெல்லாவித ஸஹாயங்களும் எல்லா பிராமணர்களும் புரியவேண்டுமென்றும், இது முதல் மூன்று வருஷத்துக்குள் 12 லட்சும் ரூபாய் சேகரிக்கும்படிக்கும் இம்மகாஸபை வேண்டுகிறது.

*முடிகொண்டான் பிரம்மஸ்ரீ ராம அய்யரால் பிரேரேபிக்கப்பட்டு, பிரம்மஸ்ரீ அபிஷவபட்டபாண R. V. கிருஷ்ணமாசாரியாரால் ஆமோதிக்கப்பட்டு, ஏகோபித்து நிறைவேறியது.*

X. பிராம்மணர் தர்மங்களையும் வித்யைகளையும் ஆதரிக்கவும், பாதுகாக்கவும், மதஸமூஹ, ராஜீய விஷயங்களில் வேதசாஸ்த்ரவரம்புக்குட்பட்டு நடப்பவர்களின் அபிப்பிராயங்களை பிரசாரப்படுத்துவதற்கு உபயோகமாயிருக்கவும் ஒரு பத்திரிகை உடனே ஸ்தாபிக்க வேண்டு மென்றும், அவ்விதம் பத்திரிகை சீக்கிரம் ஸ்தாபிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய பிரம்மஸ்ரீ (1) ராவ்பகதூர் N. கிருஷ்ணசாமி அய்யங்கார், (2) புரொபஸர் K. ஸுந்திரராம அய்யர், (3) S. மகாலிங்க அய்யர், (4) G. V. வெங்கட்டராம அய்யர், (5) அக்னிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார், (6) M. K. வைத்தியநாதய்யர் இவர்களை ஒரு கமிட்டியாக நியமிக்கிறார்களென்றும் இம்மகா ஸபை தீர்மானிக்கிறது.

*கும்பகோணம் அட்வோகேட் (சேங்காலிபுரம்) S. சீனிவாஸய்யரால் பிரேரேபிக்கப்பட்டு, நாகப்பட்ட*

ணம் பிர்ம்மஸ்ரீ வெங்கட்டராம சாஸ்திரிகளால் ஆமோதிக்கப்பட்டு பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாஸதாதாசாரியாரால் ஆதரிக்கப்பட்டு ஏகமனதுடன் நிறைவேறியது.

XI. பிராம்மணர் தர்மங்களையும் க்ஷேமங்களையும் பாதுகாப்பதற்காக "தஞ்சாவூர்ஜில்லா பிராம்மணர் ஸபை" ஒன்று உடனே ஸ்தாபிக்கவேண்டுமென்றும், இம்மகா ஸபைக்கு வந்திருக்கும் பிரதிநிதிகளெல்லாம் அந்த ஸபையின் முதல் அங்கத்தினர்களாக வைத்துக் கொள்ள வேண்டுமென்றும் தீர்மானிப்பதுடன், ஜில்லாவிலுள்ள பிராம்மணர்களெல்லாம் அங்கத்தினர்களாக சேரும்படி கேட்டுக்கொள்கிறது. ஜில்லா ஸபை ஸ்தாபிப்பதற்கு பிர்ம்மஸ்ரீ G. V. வெங்கட்டராமய்யரையும், அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாச்சாரியாரையும் கமிட்டியாக நியமித்திருப்பதால், கூடியசீக்கிரம் அவர்கள் அச்சபை அமைப்புக்குரிய விதிகளை நிர்ணயித்து ஸபை முன் அங்கீகாரம் கேட்க வேண்டுமென்றும், இம்மகாஸபை தீர்மானிக்கிறது.

ரிடைர்ட் ஹெட்மாஸ்டர் பிர்ம்மஸ்ரீ R. ஸவாமிநாதய்யர் பிரேரேபித்து, பிர்ம்மஸ்ரீ C. R. கிர்ஷ்ணஸாமி அய்யங்கார் ஆமோதித்து, ஏகமனதுடன் நிறைவேறியது.

XII. "இராஜங்க பலத்தைக்கொண்டு மகாஜனங்களின் மதக்கொள்கைகளையும், ஸமாஜசம்பிரதாயங்களையும் மாற்றிவிடலாம் என்று அர்த்தம் கொள்ளக்கூடிய "சேருகமிட்டியாரின்" ரிபோர்ட்டிலுள்ள வாக்கியங்களை இம்மகாஸபை கண்டிக்கிறது"

மன்னார்குடி முனிஸிபல் சேர்மென் பிர்ம்மஸ்ரீ குருஸாமி அய்யரால் பிரேரேபிக்கப்பட்டு, பிர்ம்மஸ்ரீ U. P. கிருஷ்ணமாசாரியாரால் ஆமோதிக்கப்பட்டு, ஏகமனதுடன் நிறைவேறியது.

XIII. "இதர ஜில்லாக்களிலுள்ள பிராம்மணர்களும் இம்மாதிரி மகாஸபைகள் கூட்டிபிராம்மண ஸமூகத்தின் அபிப்பிராயங்களை வெளியிடவேண்டுமாக இம்மகாஸபை கேட்டுக்கொள்ளுகிறது.

அக்ராஸனர் பிரேரேபித்து ஏகோபித்து நிறைவேறியது.

XIV. "நமது பெண்குழந்தைகள் தற்காலத்திய பள்ளிக்கூடங்களில் பயிலும் படிப்பானது ஸ்த்ரீ தர்மங்களை புகட்டுவதாயிராததோடுகூட, ஸநாதன தர்மத்தையும் ஆசாரங்களையும் அழிக்கக்கூடியதாயிருக்கிறதென்றும், தற்போதைய பெண்கல்வி முறையைப் பரிசோதித்து, பெண்கல்வி எத்தன்மையும் நோக்கமும் உள்ளதாயிருத்தல் வேண்டுமென்று யோஜனைகள்கூற 1. பிர்ம்மஸ்ரீ புரொபஸர் K. ஸுந்தராமய்யர். 2. ராவ்பகதூர் N. கிர்ஷ்ணஸாமி அய்யங்கார். 3. R ஸ்வாமிநாதய்யர். 4. M. K. வைத்திநாதய்யர். 5. S. மஹாலிங்கய்யர் (கமிட்டியைக் கூட்டுவோர்) 6. அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாச்சாரியார் இவர்களை (இவர்கள் அபேக்ஷிப்பவர்களையும் சேர்த்துக்கொள்ளும்படியான அதிகாரத்துடன்) கமிட்டியாகநியமிக்கிறதென்றும் இம்மஹாஸபைதீர்மானிக்கிறது."

ராவ்பகதூர் S. அப்புசாஸ்திரிகளால் பிரேரேபிக்கப்பட்டு, மாயவரம் பிர்ம்ம T. S நடேசசாஸ்திரிகளால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதுடன் நிறைவேறியது.

XV. "இராஜாங்க உத்தியோக நியமன விஷயத்திலும், மேற்பதவிகளுக்குஉயர்த்தும் விஷயத்திலும், வகுப்பைப்பொறுத்து பக்ஷபாதம் பண்ணுவதென்ற, இப்போது ஸமீபகாலத்தில் கவர்ன்மெண்டார் அங்கீகரித்திருக்கும் முறையை, இமமஹாஸபை உறுதியாய் கண்டிப்பதுடன், இந்த நீதிக்கேடான முறையை அநுஷ்டிப்பதால் இராஜாங்க காரியங்களெல்லாம் ஊழல்பட்டு, ஆட்சிமுறை திறமைகெட்டு, அவலப்பட்டுப்போய்விடுமென்றும் இம்மகாஸபை அபிப்பிராயப்படுகிறது."

அக்ராஸனர் பிரேரேபித்து ஏகமனதுடன் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டு நிறைவேறியது.

---

## தயவுசெய்து சந்தாவை உடனே அனுப்பிவையுங்கள்.



## கிராம உத்தியோகஸ்தர்கள் மகாநாடுகள்.

சென்னை மாகாண கி. உ. க்கள் மகாநாடும்; தஞ்சை ஜில்லா கி. உ. க்கள் மகாநாடும், பிப்ரவரிமீ 2-வது வாரத்தில் நடைபெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகிறது. கிராம உத்தியோகஸ்தர்கள் ஏராளமாக விஜயஞ்செய்து கான்பரன்ஸ்களை சிறப்பாக நடப்பிவித்து குறைகளை நிவர்த்திக்க வழிதேடிக்கொண்டு முன்னேற்றமடைய முயற்சிப்பார்களென்று நம்புகிறோம்.

### தஞ்சாவூர் ஜில்லா கி. உ. சங்கம்.

நாலது டிஸம்பர்மீ 30உயில் விஜயபுரத்தில் கூடிய சைசங்கத்திய நிர்வாகசபை மீட்டிங்கின் தீர்மானங்கள்:

1. ஜில்லா கான்பரன்ஸை நடத்தவேணுமாயும்;

2. ஜில்லாகான்பரன்ஸ செலவுகளுக்காக மன்னார்குடி தாலூகா சங்கம் ரூ 25 நாகப்பட்டணம் தாலூகா சங்கம் ரூ 25 தஞ்சாவூர் தாலூகா சங்கம் ரூ 25 அறந்தாங்கி தாலூகா சங்கம் ரூ 10 ஆக ரூ 85 கொடுப்பதாக எழுதியதை ஒப்புக்கொண்டு இன்னும் இதர தாலூகா சங்கங்களையும் உதவி செய்யவேணுமாய் கேட்டுக்கொள்ளுவதாக தீர்மானிக்கப்பட்டது.

### மன்னார்குடி தாலூகா கி. உ. சங்கம்.

31—12—28ல் நடந்த மீட்டிங்கில் ஜில்லா கான்பரன்சை மன்னார்குடியிலேயே நடத்தவேணுமாய் ஜில்லா சங்கத்தைக் கேட்டுக்கொள்வதாகவும் செலவுக்காக நம்முடைய சங்கத்திலிருந்து ரூ 25 கொடுக்கும்படியாயும்; கிராம உத்தியோகஸ்தர்களுக்கு ஏராளமான வேலையும் கெவர்ன்மெண்டார் அவர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற எல்லா டிபார்ட்டுமெண்டுகளுக்கும் வேண்டிய தகவல்கள் சேகரித்துக் கொடுக்கவேண்டியதுடன் சதாவேரமும் சர்க்கார் வேலை செய்யவேண்டியிருப்பதாலும் இப்போது கொடுக்கிற சம்பளமானது ஒருவருடைய காலக்ஷேபத்திற்குக்கூட போதாததாய் இருக்கிறது. ஆகையால் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு குறைந்தது ரூ 30 சம்பளம் கொடுக்கவேணுமாய்க் காருண்ய கெவர்ன்மெண்டார் அவர்களைக் கேட்டுக்கொள்வதாகவும், நமது வருஷத்திய சந்தாதுகை பாக்கியைச் சீக்கிரத்தில் அனுப்பவேணுமாய் மெம்பர்களைக் கேட்டுக்கொள்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

### அறந்தாங்கி தாலூகா கி. உ. சங்கம்.

1928ஞு நவம்பர்மீ 30உ ஆவிடையார் கோவில் போர்டு ஆண்பாடசாலையில் மகா-ள-ஸ்ரீ இராமனுஜய்யர் அவர்கள் அக்ராசனத்தின்கீழ் கூடி நடத்திய மீட்டிங் நடவடிக்கைகள் :—

1. இந்த மீட்டிங்கிக்கு மகாா-ா-ஸ்ரீ இராமனுஜய்யர் புண்ணிவயல் கிராம முன்ஸீப் அவர்களை பிரசிடெண்டாக இருக்கவேணுமாய் பலவாசன் கர்ணீக்கர் சேஷய்யர் அவர்களால் பிரரேபிக்கப்பட்டு மெம்பர்களால் ஏகமனதாய் அங்கீகரிக்கப்பட்டது.

2. சங்கக்காரியதரிசி மகாலிங்கய்யர் அவர்களால்ஜில்லா சங்கக்காரியதரிசியவர்களிடமிருந்து வந்த 16-10-28உ லெட்டரும், 17-11-28உயுள்ள லெட்டரும் கிராமானுகூலன் பத்திராதிபர் அவர்களிடமிருந்துவந்த 8-11-28உயுள்ள லெட்டரும் பட்டுக்கோட்டை டிவிஷன் மகா-ா-ஸ்ரீ டிப்டி கலெக்டரவர்களுடைய L. Dis. 3054/A 1-28 6-11-28 (உத்திரவு) புரோஸீடிங்ஸையும் சங்கம் மெம்பர்களுக்கு காரியதரிசியவர்களால் படித்துக்காட்டி மெம்பர்களால் அங்கீகரிக்கப்பட்டது.

3. சென்ற 22-9-28உயில் V. கருத்தாபிள்ளையவர்கள் அக்ராசனத்தின்கீழ் நடந்தமீட்டிங்கு 4 வது தீர்மானத்தின்படி கிராமஉத்தியோகஸ்தர்களுக்கு அனுப்பப்படும் உத்திரவுகளில் மரியாதையான பதங்களை உபயோகப்படுத்தவேணுமென்று பலவாசன்வட்டம் கி. மு. இரத்தினசபாபதிசேருவைக்காரர் அவர்களால் கொண்டுவரப்பட்டு தீர்மானம் செய்யப்பட்ட நகலை மகாா-ஸ்ரீ டிப்டிகலக்டர் அவர்களுக்கும், சத்திரம் ம-ா-ஸ்ரீ சூப்ரிண்டெண்டு அவர்களுக்கும் சங்கத்திலிருந்து எழுதியிருந்தும் சத்திரம் சூபரிண்டெண்டு அவர்களிடமிருந்து அதற்குபதில் சங்கத்துக்கு கிடைக்காத நிமித்தம் மறுமுறையும் தீர்மானித்து எழுதவேணுமாய் பலவாசன் கர்ணீக்கர் சேஷய்யர் அவர்களால் கொண்டுவரப்பட்டபிரேரேபணை மெம்பர்களால் அங்கீகரிக்கப்பட்டது.

4. மெம்பர்களின் சங்க சந்தாதுகையை இதுவரையில் ஒவ்வொரு மீட்டிங்குக்கும் காரியதரிசி

யால்எழுதப்பட்டுநிரூபமூலமாகமீட்டிங்குக்குவரும்சமயத்தில் கொண்டுவரவேணுமாய் எழுதியும் ஒருவருவது அவ்விதம் வருமல் இருப்பதை முன்னிட்டு இந்த சங்கம் சேர்ந்த வெள்ளூர் ரேஞ்சுக்கு அமஞ்சாக்கி கர்ணீக்கர் G. ஜம்புநாதய்யர் பலவாசன் கர்ணீக்கர் சேஷய்யர், வெள்ளூர் கர்ணீக்கர் வெங்கட்டராமய்யர், தில்லையங்குடி கர்ணீக்கர் கிருஷ்ணஸ்வாமி அய்யர், இவர்களையும், பொன்பேத்தி ரேஞ்சுக்கு சாட்டியக்குடி கர்ணீக்கர் ராஜாராமய்யர், செங்கானம் கர்ணீக்கர் சேதுராமய்யர், சங்கபிரசிடெண்டு கதிருமங்கலம் கி. மு. மருதப்பனம்பலக்காரர், சாத்தியடிக்கர்ணீக்கர் கிருஷ்ணமூர்த்தி அய்யர், அமரடக்கி கர்ணீக்கர் ஸௌந்திரராஜய்யங்கார் இவர்களை டிஷ துகைகளை வசூலித்து காரியதரிசியவர்களுக்கு அனுப்பும்படியாய் தீர்மானிக்கப்பட்டது.

5. ஜில்லா சங்கக் காரியதரிசியினுடைய 17-11-28௳ யுள்ள லெட்டர்படி இந்தச்சங்கத்திலிருந்து டெலிகேட்டாகப் போய்வருவதற்கு உ. காரியதரிசியைப்போய்வரும்படிக்கும் அட்வான்சாக ரூ 7. ஏழு ரூபாய் பொக்கிஷதாரிடம் பெற்றுக்கொண்டு டிஷமீட்டிங்கிக்கு போய்வந்து பில்தயாரித்து கொடுக்கும்படியாகவும், வரவுசிலவுக்காக உ. காரியதரிசியிடம் ரூபாய் ஒன்றுக்குக்குறையாமல் பொக்கிஷதார் கொடுக்கும்படியும் தீர்மானிக்கப்பட்டது,

அடுத்த மீட்டிங்கை 21-12-28௳ ஆவிடையார் கோவிலில் கூடும்படி தீர்மானிக்கப்பட்டது.

மேல்கண்ட தீர்மானங்களின் நகலை சம்மந்தப்பட்ட ஆபீசர்களுக்கும் கிராமானுகூலன் பத்திராதிபர் அவர்களுக்கும் அனுப்பும்படி தீர்மானிக்கப்பட்டது.

## கும்பகோணம் தாலூகா போர்டு எலக்ஷன்.

சோழபுரம் சர்க்கிளுக்கு நடந்த எலக்ஷனில் ஸ்ரீமான் T. R. மாணிக்கம்பிள்ளை அவர்களுக்கு 303-ஓட்டுகளும் ஸ்ரீமான் அருணாஜலபடையாச்சிக்கு 92-ஓட்டுகளும்கிடைத்தன ஸ்ரீமான்பிள்ளை அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார் மிகத்தகுதியுள்ளவரையே ஏராளமான ஓட்டர்கள் தேர்ந்தெடுத்ததை பாராட்டுகிறோம். கிராமஉத்தியோகஸ்தர்கள் இந்தஎலக்ஷனில் சிரத்தைஎடுத்துக்கொண்டதுசங்கம் பிரசிடெண்டு இடத்தில் அவர்கள் வைத்திருக்கும் மதிப்பிற்கறி குறியாயிருந்தது.

## ஓர் மோசம்

காவனூர் கிராம முன்சீப் ஸ்ரீமான் நாராயணசாமி பிள்ளை என்பவர், ராஜிநாமா கொடுத்துவிட்டதுபோல் அவர் கையெழுத்து போட்டிருந்த பேப்பரில் எழுதிக்கொடுக்கப்பட்டதாயும், கிராமத்தில் தண்டோரா போட்டதுபோல் பாவனைசெய்யப்பட்டுவிட்டதாயும், நோட்டீஸ் தேதியில் ஒரே அப்ளிகேஷன் ஆக்டிங்கிலிருந்த அவர் மைத்துனன் சுந்திரம்பிள்ளை, என்பவரால் கொடுக்கப்பட்டதாயும், அவர் நியமிக்கப்பட்டுவிட்டதாயும், இது, மோசடி என்றும், கண்டு கலெக்டருக்கு, மனுகொடுக்கப்பட்டு புனர் விசாரணைக்கு வந்திருக்கிறது. தாசில்தார் ஸ்ரீமான் சுயம்புவய்யர் திடீரென்று கிராமத்திற்கு விஜயம் செய்து உண்மையை விசாரித்து தெரிந்துகொண்டு [illegible] ரிபோர்ட்டு செய்ததின்பேரில் டிவிஷன் ஆபீசர் ஸ்ரீமான் V. S. ஹாஜ்மாடி துரையவர்கள் அந்த நியமனத்தை ரத்துசெய்துவிட்டதாக அறிவிக்கப்படுகிறோம்.

## விஜயபுரத்தில் யூனியன் பாங்கின் கிளை.

திவான்பகதூர், V. K. ராமானுஜாச்சாரியார் அவர்களாலும், ராவ்பகதூர், N. கிருஷ்ணசாமிய்யங்கார் அவர்களாலும் ஆரம்பிக்கப்பட்டு மிகவும் நல்ல நிலைமையில் நடந்துவருகிற கும்பகோணம் யூனியன் பாங்கின் கிளை ஆபீஸ் ஒன்றை விஜயபுரத்தில் ஏற்படுத்த தீர்மானித்திருக்கிறார்கள். ஜில்லாவுக்கு சரியான செண்டராகவும், நல்லவியாபாரஸ்தலமாகவுமுள்ள இடமாகையால் சிறப்பாக நடைபெறுமென்பதற் கையமில்லை. பாங்கின் சவுகரியங்களை அடைய முடியாமலிருந்த சுற்றுப் பக்கத்திலுள்ள மிராசுதார்களுக்கும் வியாபாரிகளுக்கும்மிகுந்த அனுகூலமுண்டாகும் நிர்வாகத்திறமையில் ஒப்புயர்வற்று விளங்கும் ராவ்பகதூர், N. கிருஷ்ணசாமிய்யங்கார் அவர்கள் ஆரம்பமுதல் பிரசிடெண்டாகயிருந்து தற்சமயம் மானேஜிங் டைரக்டராக இருப்பதால் இந்த பாங்கு மிகச் செழிப்புற்று விளங்குகிறது.

## விளம்பரம்.

**த. ச. சுப்பராயலு செட்டி & பிரதர்ஸ்.,**
ஜவுளி, பித்தளை, வெள்ளி பாத்திரங்கள்,
ஷராப் வியாபாரம், மன்னார்குடி.



# காலண்டர்கள் வரவு.

கும்பகோணம் தென் இந்திய கன்பெக்ஷனரி பாக்டரியிலிருந்து ஸ்ரீ கிஷ்ணன், ராதாவின் திருவுருவங்கள் மிக அழகாய்கண்ணைக்கவரத்தக்கதாய் அமையப்பெற்ற காலண்டர்வரப்பெற்றோம். டிஷ தொழிற்சாலையில் தயாராகும் பெப்பர் மிண்ட் வகையராக்கள் அன்னிய நாட்டிலிருந்து இறக்குமதியாவதைவிட மேன்மையுற்று விளங்குவதுபோல் காலண்டரும் அமையப்பெற்றிருக்கிறது.

ஜெயலெக்ஷிமி அண்டு கோவிலிருந்து ஸ்ரீஜெலெக்ஷிமியின் திருவுருவம் தாங்கிய மிக அழகிய காலண்டர் வரப்பெற்றோம். சந்தனம் வாசனதிரவியங்கள் தைலவகைகள் முதலியவைகளில் மிகப்பிரசித்தமாய் விளங்கும் இவர்கள் கம்பெனியின் பெயருக்கேற்ப அமைந்திருக்கிறது.

மங்களவிநாயகர் கம்பெனிலிமிடெட்டிலிருந்து ஓர் அழகிய சித்திரப்படம் தாங்கிய காலண்டர் வரப்பெற்றோம். அவர்கள் மங்களவிநாயகர் உருவம் தாங்கிய ஒருகாலண்டரும் பிரசுரித்திருக்கிறார்கள். இந்தகம்பெனியானது மேல்நாட்டு முறையைஅனுசரித்து வரையறுக்கப்பட்டதாக நமது ஜில்லாவிலுள்ள பாரிமிராசுதார்கள் சேர்ந்து நடத்தப்படுகிறது. நானாவிதஜவுளிகளும் இங்கே கிடைக்கிறது. கம்பெனியின்பெயருக்கேற்ப காலண்டரும்மிகவும்நன்ருய் அமைந்திருக்கிறது.

ஸ்ரீமான் கோட்டூர் கிருஷ்ணசாமிய்யர் அவர்களிடமிருந்து ஸ்ரீ கோபாலகிருணன் உருவம் தாங்கியஅழகிய காலண்டர் வரப்பெற்றோம். நீண்டகாலமாக ஜவுளிவியாபாரத்தில் சிறந்து விளங்குவதுடன் பல பொதுவிஷயங்களிலும் சம்மந்தப்பட்டு சிறப்புடன் விளங்கும் அய்யர் அவர்கள் மைலாப்பூரிலும்ஒருபிராஞ்சுவைத்து நடத்திவருகிறார்கள். அவர்கள் குணத்திற்கேற்ப காலண்டரும் அமைந்திருக்கிறது.

ஸ்ரீமான் K. ராகவேந்திராவ் அவர்களிடமிருந்து ஓர் அழகிய காலண்டர் இரண்டு கலர்களுள்ளதாய் சுவற்றில் மாட்டும் பெரிய சைஸில் மாதத்திற்கொருபக்கம் பெரிய எழுத்துக்களில் வரையப்பட்டதாக வரப்பெற்றோம் அன்னார் சந்திர விலாசம் என்றபெயருடன் நடத்திவரும் வியாபாரத்தில் நானாவித பொருள்களையும் ஏராளமாக தருவித்து சொற்ப லாபத்திற்கு சில்லரை வியாபாரிகளுக்கு விற்றுவருவதுபோல் காலண்டரும் அமைந்திருக்கிறது.

தென் இந்தியா பேப்பர் மார்ட், சென்னை ஜார்ஜ்டவுன் ஆர்ண்டர்ஸன் தெருவிலுள்ளமேற்படி கம்பெனியாரிடமிருந்து சுவற்றில் மாட்டும் பெரிய சைஸ் காலண்டர் மாதத்திற்கொருபக்கம் உள்ளதாய் வரப்பெற்றோம். பேப்பர்களை மொத்தமாய் வரவழைத்து வியாபாரம் செய்யும் இவர்கள் கம்பெனியின் வியாபாரத்திற்கேற்றபடி அமைந்திருக்கிறது.

கிஷ்ணு அண்டு கோ, மெட்ராஸ் டிஷயாரிடமிருந்து சுவற்றில் மாட்டும் 12 ஷீட்டுகளடங்கிய அழகியகாலண்டர் வரப்பெற்றோம் ஒவ்வொரு ஷீட்டிலும் ஸ்ரீ மகாவிஷ்ணு முதலிய தெய்வங்களின் திருவுருவங்கள் விளங்குகின்றன அழகாய் அமைந்திருக்கிறது.

T. K. வீராசாமி நாயுடு அண்டு சன்ஸ் இடமிருந்து 12ஷீட்டுகள் அடங்கிய அழகிய காலண்டர் வரப்பெற்றோம். இங்கிலீஷ்தேதி தமிழ்தேதி இரண்டும் சேர்த்துப் போட்டிருப்பது சவுகரியமானதே. மூக்குக்கண்ணாடி வியாபாரத்தில் சிறப்புற்று விளங்குவதற்கேற்றபடி அமைந்திருக்கிறது.

## தேவஸ்தானங்கள்.

கும்பகோணம் ஸ்ரீகாளஹஸ்தீஸ்வர சுவாமி கோவிலும், ஸ்ரீ காசிவிசுவநாதஸ்வாமி கோவிலும் சரிவரநிர்வகிக்கப்படவில்லை யென்றும்சொத்துக்கள் துர்விநியோகப்படுத்தப்படுகிறதென்றும் பொதுஜனங்கள் மகஜர் தயாரித்து பிரிண்டு செய்து தேவஸ்தான போர்டுக்கும் கமிட்டிக்கும் அனுப்பியிருக்கிறார்கள் இதன் காப்பி நமக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது பொதுஜனங்கள்விழித்துக்கொண்டுகவனிக்கஆரம்பித்தால்எல்லாம்சரிவர நடைபெறஇடமுண்டாகிவிடும். சுறுசுறுப்புள்ள பிரசிடெண்டு ஸ்ரீமான் K. R. M. சிங்காரம்செட்டியார் அவர்கள் தக்கநடவடிக்கை எடுத்துக்கொண்டிருப்பதாய் கேள்விப்படுகிறோம்.

## இந்துநேசன் வருஷ அனுபந்தம்.

இந்துநேசன் வருஷ அனுபந்தம் வரப்பெற்றோம் வழக்கம்போல் வழவழப்பான காகிதத்தில் அநேக சித்திரப்படங்கள் நிறைந்ததாய் மனதை வசீகரிக்கும் தன்மையுள்ளதாய் பிரகாசிக்கின்றது. முதல்தரமான வியாசங்கள் பல கல்விமான்களால் இங்கிலீஷிலும் தமிழிலும் வரையப்பட்டிருக்கிறது. கூட்டுறவு முறையைப்பற்றியும் துளசிச்செடியின் மகிமையைப்பற்றியும் மிக உபயோகமுள்ள வியாசம் வெளிவந்திருக்கிறது அநேக கதைகளும் சரித்திரங்களும் அறிவைப் பெருக்கக்கூடியதாய் விளங்குகிறது. 28 வருஷகாலமாய் விடாமுயற்சியுடன் பல கஷ்டங்களுக்கிடையே பத்திரிகையை செவ்வனே நடத்திவரும் பத்திராதிபர் ஸ்ரீமான் L. அனந்தய்யர் அவர்களின் திறமையை மிகவும் பாராட்டுகிறோம்.

இதன் விலை ரூ. ஒன்று. வேண்டுவோர் மானேஜர் "இந்துநேசன்" 65 அரண்மனைக்காரன் தெரு, சென்னை என்ற விலாசத்திற்கெழுதி பெற்றுக்கொள்ளலாம்.

"சுதந்தரன்"
பர்மாவில்
தேசத்தொண்டில் முன்னணியில்
நின்றுலவும்,
[illegible] தேசிய செந்தமிழ் வாரப் பத்திரிகை.

| | |
|---|---|
| வருட சந்தா | 5—0—0 |
| ஆறுமாத சந்தா | 2—8—0 |

ஆசிரியர்:—ஸ்ரீமான் சு. நா. சுந்தர முதலியார்.
இந்திய இரத்தம் ஓடும் ஒவ்வொரு இந்தியரும்,
இதை ஆதரித்தல் அவசியமாகும்.

மானேஜர்,
"சுதந்தரன்" காரியாலயம்,
39, 37-வது வீதி, இரங்கோன்.

"கம்மபாலன்"
(மூன்றும் வருடம்)
பிரதி தமிழ்மாதக் கடைசியில் வெளிவரும்
தமிழ்ப் பத்திரிகை.
வருட சந்தா ரூபாய் ஒன்றுதான்.
கிராமவாசிகளுக்கு இன்றியமையாதது!
விளம்பர விகிதத்துக் கெழுதுங்கள்!!

பத்திராதிபர்:—
ஆர். வேங்கடசாமி நாயுடு,
கம்மபாலன் ஆபீஸ், திருத்தங்கல்,
சிவகாசி சமீபம். (S.I.Ry.)

தியாகசமுத்திரம், T. S. ராஜகோபாலய்யர்,
களஞ்சேரி, K. P. அய்யாஸாமி அய்யர்,
ஜவுளி வியாபாரம், 48, பெரியதெரு, கும்பகோணம்.

எங்களிடத்தில் பெங்களூர், தர்மாவரம், காஞ்சீபுரம், ஆரணி, பெனாரஸ், காசி முதலிய பல ஊர் ஜரிகை சேலை சுத்த பட்டு சேலைகளும், சேலம், காஞ்சீபுரம், ஆரணி, துகிலி, துறையூர், குளித்தலை முதலிய பல ஊர் வெள்ளை ஜவுளிகளும், ஜரிகை துப்பட்டாக்களும் மதுரை சுன்னடி சேலைகளும், துப்பட்டாக்களும் ஏராளமாய் ஸ்டாக் செய்து சாயத்துக்கு காரண்டியுடன் குறைந்த லாபத்துக்கு விற்றுவருகிறோம். தாங்களும், தங்கள் இஷ்டமித்திராளுக்கும் சொல்லி நேரில்வந்து பார்த்து வியாபாரத்தை ஆதரிக்கும்படிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

Regd. No. M. 1930. 195

# கிராமானுகூலன்.

## (அனுபந்தம்)

## கிராம உத்தியோகஸ்தர்களுக்கு மே. த. கவர்னரின் பேட்டி.

சென்னை செயின்ட் ஜார்ஜ்கோட்டை மந்திராலோசனை சபை மண்டபத்தில் 21-2-29 பகல் 12-30 மணிக்கு மேன்மைதங்கிய கவர்னர் தமது அந்தரங்ககாரியதரிசியுடனும், ரிவினியூசெக்ரெட்டரி மிஸ்டர் எச். ஆர். பேட்டுலை அவர்களுடனும் கிராம உத்தியோகஸ்தர்களுடைய டெபுடேஷனை ஏற்று பேட்டியளித்தனர்.

டெபுடேஷன் மெம்பர்கள் கூடியிருந்த மண்டபத்திற்கு மே. த. கவர்னர் விஜயம் செய்ததும் மாகாண கி. உ. சங்கத்தலைவர் ஸ்ரீமான் கூடக்குளம் பி. சுப்பய்யாபிள்ளையவர்கள் வரவேற்று ரோஜா புஷ்பமாலை சூட்டியதுடன் மே. த. கவர்னர் அவர்கள் அனுமதியின் பேரில் அனைவரும் ஆசனத்திலமர்ந்தனர். பின்னர் மாகாணச் சங்ககாரியதரிசி திருவாளர் வி. ராமநுஜதாத்தாச்சாரியார் அவர்களால் கிராம உத்தியோகஸ்தர்களின் குறைகளடங்கிய மெமோராண்டம் படித்துக்கொடுக்கப்பட்டது. கிராமாதிகாரிகளுக்குள்ள குறைகளைப்பற்றியும் இதர விஷயங்களைப்பற்றியும் நேரில் பேசிக் கேட்க ஆவல் படுவதாக மே. த. கவர்னர் பிரபு தெரிவித்ததும் அங்கத்தினர்களில் சிலர் முக்கியமாய் சம்பளக் குறைவைப்பற்றியும் கீழ் அதிகாரிகள் கேவலமாய் நடத்தும் பிரயத்தனங்களைப்பற்றியும் பாப்பரை பாத்தியமில்லாத ஜில்லாக்களுக்கும் மேற்படி பாத்தியதைகளை கொடுக்கவேண்டு மென்பதைப்பற்றியும் கி. உ.க்களுக்கு ரிவினியூ சம்மன் பேரில் ஆஜராகும் கிராமங்களுக்குப்படி கொடுக்காமல் காலதாமதம் செய்துவருவதைப் பற்றியும் கிரிமினல் கோர்ட்டில் 3-வது கிளாஸ் பேட்டா கொடுத்துவருவதை நிறுத்த [illegible] பற்றியும் கவர்ன்மென்டு எஸ்டேட் ஜமீன் கிராமங்களில் மானிய நிலங்களைப் பற்றியும் ஸ்டேபாயின் டெண்டு பரிக்ஷையில் [illegible] லாதவர்களுக்குக் கண்டிஷன் பேரில் வேலைகொடுக்கப்படாது என்ற நிர்ப்பந்தத்தை [illegible] ஒழித்துவிடவேண்டுமென்றும், ஸ்டேஷனரி சப்ளையில்லாமல் கி. உ.க்கள் சொந்த செலவில் கஷ்டப்படுவதைப் பற்றி உடனே பரிசீலனை செய்ய வேண்டுமென்றும், இன்னும் அனேக குறைகளையும் தெளிவாக எடுத்துரைத்தனர். மேன்மை தங்கிய கவர்னர் பிரபு மெமோராண்டத்திற் கண்ட குறைகளையும் இதர விஷயங்களையும் தமக்குள்ள சந்தேகங்களையும் கேள்விகள் மூலமாய் டெபுடேஷன் மெம்பர்களிடம் நன்கு தெரிந்துகொண்டு டெபுடேஷனுக்கு பதிலளிக்கும்பொழுது சகல விஷயங்களையும் கவனித்து அதற்குத் தக்க பரிகாரம் செய்து கொடுப்பதாயும், கிராம உத்தியோகஸ்தர்களை வரவேற்றது இதுதான் முதல் தடவை என்றும் இவ்விதம் கிராம உத்தியோகஸ்தர்களை சந்தித்து மேற்படியார்களின் விஷயங்களை நேரில் கேட்க நேர்ந்ததற்கு மிகவும் சந்தோஷப் படுவதாயும், மெமோராண்டத்திற் கண்ட குறைகளில் தமக்கு பூரண அனுதாபமிருக்கிற தென்றும் விசேஷமாய் நேரில் கவனித்து வேண்டியதைச் செய்வதாயும், கூடிய சீக்கிரத்தில் மெமோ[illegible]ரில் கண்ட விஷயங்களுக்கு விரிவான பதில் மாகாண சங்கத்திற்கு அனுப்புவதாயும் அதிக முக மலர்ச்சியுடன் விடையளித்தனர். பிறகு வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது. பொக்கிஷ மெம்பர் மிஸ்டர் மாயர் [illegible] அவர்களையும் நேரில் பார்த்து எல்லாக் குறைகளையும் எடுத்து சொல்லிக்கொண்டு புஷ்பமாலை சூட்டிக் கூட்டம் கலைந்தது மாலை 4-மணிக்கு [illegible] வி. ஈ. மகாசபை கூட்டம் நடைபெற்றது.

டெபுடேஷன் அங்கத்தினர்கள்:—

ஸ்ரீமான்கள் கூடக்குளம் பி. சுப்பய்யா பிள்ளை வி. இராமாநுஜதாத்தாசாரியார், ஜெயசாமி தேவர், எம். கே. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை, வீரராகவலுநாயுடு, என். வி. இராமலிங்கம் பிள்ளை, வி. சுப்பிரமணியய்யர், கல்யாணமங்கலம் சின்னசாமி வேலுப்பிள்ளை.

பூண்டி சேஷாச்சாரியார். கோதண்டராம அய்யர், கைலாசனாத குருக்கள், கே. எ. துரைசாமி அய்யர், வெங்கிடபதி செட்டியார், இராஜமாணிக்கம் பிள்ளை, முத்துசாமி பிள்ளை, ஜி. கிருஷ்ணசாமி அய்யர்; தஞ்சைஜில்லா கி. உ. சங்க காரியதரிசி டி. எஸ். சொக்கப்ப முதலியார், குதா. கி. உ. சங்க காரியதரிசி, எஸ். இராஜாராமய்யர், கி. உ. சங்கம், நாகப்பட்டணம்.எட்டியப்பமுதலியார், சதாசிவம் பிள்ளை, எம்.பாஷியம் பிள்ளை, கண்ணுப் பிள்ளை, மதுரை முத்து பிள்ளை, சிங்காரம் பிள்ளை, வி. நடேச முதலியார், எஸ். ராம அய்யர், ராகவேந்திர ராவ், சிவகிரி, வி. குருமூர்த்தி அய்யர், எல்லப்பா, என்.எம்.பட்நாய்க் கஞ்சம், கடம்பை கி. மு. பி மாணிக்கம்பிள்ளை சுப்பராய அய்யர், எம். ஆதிநாருயண மூர்த்தி பி. சந்திர ராவ், கே சுந்திரமூர்த்தி பிள்ளை.

சென்னை மகாண கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கப்பிரதி நிதிகள் மே த. கவர்னரை பேடிகண்டு பேசியபொழுது சமர்ப்பித்த மெமோராண்டத்தின் சாராம்சமாவது:—

கிராம உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் மிகக் குறைவாக இருக்கிறது ஜமீன்தாரிப்பிரதேசங்களிலுள்ள கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் சம்பள விஷயத்தில் வித்தியாசம் காட்டுவதுகூடாது இந்த வித்தியாசத்தை ஒழிக்க வேண்டுமென இரண்டு வருஷங்களுக்கு முன் சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றியும் அது அனுஷ்டானத்துக்குவரவில்லை கவர்ன்மெண்டார் இவ்வுத்தியோகஸ்தர்களின் சம்பளத்தை உயர்த்தாமல் குறைத்து விட்டார்கள். எங்களுக்கு மேலிருக்கும் உத்தியோகஸ்தர்களாலும் மற்ற சில்லரை உத்தியோகஸ்தர்களாலும் விளையும் கஷ்டம் கொஞ்சமல்ல சுற்றுப்பிரயாணம் வருகையில் நாங்கள் அவர்களுக்குச்சப்ளை செய்யவேண்டிய நிர்பந்தமேற்படுகிறது மற்றஉத்தியோகஸ்தர்களுக்கு பிரயாணப்படி கொடுக்கையில் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு மட்டும் அதைகொடுக்க மறுப்பானேன் கிராம சச்சரவு முதலியவைகளில் கிராமாதிகாரி ஒரு வழியிலும் தலையிடாமலிருக்க கிராம பஞ்சாயத்து சட்டத்தைத்திருத்த வேண்டும் அதில் கிராமஉத்தியோகஸ்தர்களுக்கும் கிராம பஞ்சாயத்து கோர்ட்டில் ஒரு மெம்பராக எப்போது மிருக்க ஏற்பாடு செய்யவேண்டும். ஸ்தலஸ்தாபனங்களில் கிராமஉத்தியோகஸ்தர்கள் (கர்ணம்) அங்கம் வகிக்ககூடாமலிருக்கும் சில நிர்பந்தங்களை நீக்கவேண்டும். சென்னை நகரில் எங்கள் சங்கக் கட்டிடம் கட்ட ஒரு நிலம் வாங்கிக் கொடுக்க வேண்டுகிறேம்.

## பாலச்சந்திர பற்பொடி.

(சகல தந்தரோகங்களையும் நிவர்த்திக்கும்.)
இதற்கு சமானம் வேறு கிடையாது.
ஒருமுறை உபயோகித்தால்
உண்மை விளங்கும்.

கல்நார் கர்பாலிக் சேர்த்து நூதன முறையில் தயார் செய்யப்பட்டது.
20-வருஷ காலமாய் பிரசித்தி பெற்றது.
டப்பி 1-க்கு அணு 3 ! டஜன் நூ 1—14—0 !!
பொட்டணம் அணு 1 ! 25 பொட்டணங்கள் நூ 1—4—0 !!
100 பொட்டணங்கள் நூ 4—8—0 (தபாற்கூலிபிரத்தியேகம்.)
பாலச்சந்தர டிப்போ. கும்பகோணம்.

Printed at the Sri Kala Press and Published by N. Apathsagaya Aiyar at Kumbakonam.



## கிராம உத்தியோகஸ்தர்களுக்கு மே. த. கவர்னரின் பேட்டி.

கிராம உத்தியோகஸ்தர்களுக்கு இருக்கும் எல்லாக் குறைகளையும் மேன்மை தங்கிய கவர்னரிடம் தெரியப்படுத்தி ஒரு முடிவுக்கு கொண்டுவரவேண்டி, நம் சங்க டெபுடேஷனை ஏற்றுக் கொள்ளும்படி சென்ற 2, 3, மாதங்களாகப் பிரயத்தனங்கள் செய்துகொண்டிருந்தது யாவருக்கும் தெரிந்த விஷயமே. அதற்கு ஜவாபாக மே. த. கவர்னர் பிரபு அவர்கள் 21-2-29 வியாழகிழமை பகல் $12\frac{1}{2}$ மணிக்கு நம் டெபுடேஷனை ஏற்றுக்கொள்ளுவதாயும், எத்தனை கிராம உத்தியோகஸ்தர்கள் டெபுடேஷனுக்கு வருகிறார்களென்றும், கிராம உத்தியோகஸ்தர்கள் குறைகள் என்னென்ன வென்றும் உடனே தெரிவிக்கும்படியும் கடிதம் வந்திருக்கிறது.

தயவு செய்து அபன் ரயத்துவாரி ஜமீன் முதலிய எல்லா கிராம உத்தியோகஸ்தர்களும் மேற்படி டெபுடேஷனில் கலந்து கொள்ள வேணுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேற்படி டெபுடேஷனுக்குச் சென்னைக்கு வர விரும்பும் கிராம உத்தியோகஸ்தர்களும், தலைவர்களும், அவரவர்கள் மதராஸ், மைலாப்பூர், அருண்டேல் தெரு 20.நெ. வீட்டிலிருக்கும் எனது விலாசத்திற்கு தாமதியாமல் உடனே தந்தி மூலம் தெரிவிக்கும்படியும் தவருது ஷை தேதிக்கு முன்னுடியே மதருஸ் வந்து என்னை சந்திக்கும்படியும் கேட்டுக் கொள்ளுகிறேன் என்று சென்னை மாகாண கி. உ. சங்க பிரசிடெண்டு ஸ்ரீமான் பி. சுப்பைய்யா பிள்ளை எழுதுகிறார்.

BLOCKS AND

ENGRAVING RUBBER STAMP.

அச்சாபீஸ்களுக்கும் புஸ்தகம் போடுகிறவர்களுக்கும் வேண்டிய பிளாக்குகள் அச்சாபீஸ் Type உயரத்திற்குச் சரியாக ஈயம் பிளேட்டில் எங்கிரேவிங்செய்து கட்டைகளுடனும், பித்தளையால் லோப் டைமுதலியவைகளும், மெடல் பவுண்டன்பேனு முதலியவைகளுக்கு பெயர்களும் (Name) போடப்படும். ரப்பர் ஸ்டாம்பு முதலியவைகளும் ஸ்கூல்களுக்கு வேண்டிய வெள்ளை கலர் சாக் (Oil & Dry) கலர் (Boxes) பாக்ஸ்கள் (Slate) பென்ஸல்கள் தட்டார வேலைக்கு வேண்டிய குவை முதலியவைகள் செய்து கொடுக்கப்படும்.

Apply to:-E. N. SANKARNARAYAN,
Block & Rubber Stamp Makers, Kumbakonam.

## பாலச்சந்திர பற்பொடி.

(சகல தந்தரோகங்களையும் நிவர்த்திக்கும்.)
இதற்கு சமானம் வேறு கிடையா தென்பது திண்ணம்.
ஒருமுறை உபயோகித்தால் உண்மை விளங்கும்.
கல்நார் கர்பாலிக் சேர்த்து நூதன முறையில் தயார் செய்யப்பட்டது
20-வருஷ காலமாய் பிரசித்தி பெற்றது.
டப்பி 1-க்கு அணு 3 ! டஜன் நூ 1—14—0 !!
பொட்டணம் அணு 1 ! 25 பொட்டணங்கள் நூ 1—4—0 !!
100 பொட்டணங்கள் நூ 4—8—0 (தபாற்கூலிபிரத்தியேகம்)
பாலசந்தர டிப்போ. கும்பகோணம்.

மணம் மிகுந்தவை ! குணம் நிறைந்தவை !!

## ஜெயலெக்ஷ்மி அண்டு கோ.

அத்தர் வியாபாரம்,
பெரியகடைத்தெரு, கும்பகோணம்.

JAYALAKSHMI TRADE MARK

முக்கிய கவனிப்பு.

இதனால் தெரிவித்துக்கொள்வது யாதெனில்:-எங்களால் தயாரிக்கப்படும் ஸாமான்கள் மற்றவர்களைப்போல் வீணான படாடோபமன்னியில் ராஜாங்க பண்டிதர்களால் கையாளப் பட்டுவந்த முறைகளில் சொல்லிபடிக்குள்ள மூலிகை சரக்குகள் பூராவையும் சேர்த்து செய்பாகம் தவராது உயர்ந்த மாதிரியாக மணம், குணம், நலம், இம்மூன்றும் ஒற்றிருக் கும்படித் தயாரித்து நேயர்களுக்கு நன்மையைச் செய்து அதனால் நாங்கள் தக்க ஸர்டிபி கேட்டுகளும் பெற்றிருக்கிறோம். ஸ்ரீமான்கள் அன்புடன் நமது வாஸனைசாலைக்கு விஜயம் செய்து நேரில் பார்த்துக்கொண்டு தங்கள் சிநேகிதர்களுக்கும் நமது வாஸனைசாலையைப் பற்றி சிபார்சு செய்து நல்லாதரவு அளிக்கும்படி வேண்டுகிறோம்.

உயர்தர மாதப் பத்திரிகை !] உ [இரண்டாவது வருடம் !!

5000 சந்தாதாரர்கள்.

## கிராமனுகூலன்.

கிராம உத்தியோகஸ்தர்களுக்காக உண்மையாயும், தைரியத்துடனும் விசேஷ தியாகம்செய்து உழைத்துவருகிற

ஸ்ரீமான் N. ஆபத்ஸகாய ஐயர், பத்திராதிபர்.

மிராசுதார்கள், விவசாயிகள், கிராம உத்தியோகஸ்தர்கள், ஆரம்ப ஆசிரியர்கள், பிராஞ்சு போஸ்டு மாஸ்டர்கள், ஐக்கிய நாணயச்சங்கங்கள், கிராம சுகாதாரம், லோகல் போர்டுகள், கிராமபுனருத்தாரணம் முதலிய விஷயங்களைப்பற்றி அநேக மேதாவிகளால் எழுதப்படும் அரிய விஷயங்களுடனும், தேசபக்தி புகட்டும் சிறந்த நாவல்களுடனும் வெளி வரும் ஓர் உயர்தர மாதப்பத்திரிகை ஆங்கிலமாதச்சஞ்சிகைகளுக்கு சமானமாய் கிரௌன் 1-க்கு 4-அளவில் மிக உயர்தரமாய் நடத்தப்படுகின்றது இதுபோன்ற தமிழ்மாதச் சஞ்சி கை வேறு கிடையாது. தமிழ்நாடெங்கும் புகழ்வாய்ந்த பத்திரிகை இதுவே.

கிராம உத்தியோகஸ்தர்கள் ஒவ்வொருவரும் சந்தாதாரராகத் தவறமாட்டார்கள் என்று நம்பப்படுகிறது தங்கள் சிநேகிதர்களுக்கும் சிபார்சு செய்து சந்தாதாரராகும்படி செய்யுங்கள்

விளம்பரம் செய்வோர்களுக்கு ஏற்ற பத்திரிகை.

வருட சந்தா ரூ. 2—0—0 வெளிநாடுகளுக்கு ரூ 2—8—0

மானேஜர் :-"கிராமானுகூலன்,"
கும்பகோணம்.

Printed at the Sri Kala Press and Published by N. Apathsagaya Aiyar at Kumbakonam.